ஸ்ரீ ஹரதத்தர் பக்தஜன ஸபை, சென்னை.

வெளியீடு. நெ. 1

உ

சிவமயம்.

# ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரம்

(சுருக்கம்)



அப்பர் ஸுந்தரர் திருஞான மாணிக்க வாசகர்

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி, சென்னை 5.

பிரசுரம் செய்தது.

ஸர்வதாரி

சென்னை] [விலை அணா 6

உ

அன்பே சிவம்.

இஃது

பிரம்மஸ்ரீ உபந்யாஸ ரத்னம்

**திருவையாறு கணபதி சாஸ்திரிகள்**

அவர்களுக்கு

அவருடைய சிவபக்தியையும், அவர் செய்துவரும்
ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரம், சிவபரத்வம், சிவோத்கர்ஷம்
முதலிய அரிய பிரஸங்கங்களையும் பாராட்டி

அர்ப்பணம் செய்யப்பெற்றது.

சபம.

உ

சிவமயம்

## ஸ்ரீ எம். ராமகிருஷ்ணன் அவர்கள் எம்.ஏ., பி.எல். எழுதிய

# வாழ்த்துரை

சைவஸமயாசார்யார் நால்வரும் ஆயிரக்கணக்கான தேவாரங்களினால் சிவபரத்வம் ஒன்றையே பாடினார்கள். தேவாரமாவது வேதஸாரம். வேதங்களின் ஸாரமும் சிவதத்வமே. இதன் உண்மை சில ச்ருதி யாதாரங்களுடனும், தேவார ஆதாரங்களுடனும் இப்புத்தகத்தில் ஆங்காங்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரனால் ஸகல வேத சாஸ்திரங்களிலும் "ஸர்வக்ஞராக" அனுக்ரஹிக்கப்பெற்ற ஸ்ரீ ஹரதத்தர், நால்வரும் தமிழில் பாடிய சிவதத்வத்தைத்தான் ஸம்ஸ்கிருதத்தில் ச்ருதியாதாரங்களுடன் ஸ்தாபித்தார். மகாகவி காளிதாஸனும்,

वेदान्तेषु यमाहुरेकपुरुषं व्याप्य स्थितं रोदसि
यस्मिन्नीश्वर इत्यनन्यविषयः शब्दो यथार्थाऽक्षरः ।
अन्तर्यश्च मुमुक्षुभिर्नियमितप्राणादिभिर्मृग्यते
स स्थाणुः स्थिरभक्तियोगसुलभो निःश्रेयसायास्तु नः ॥

இதுபோன்ற ச்லோகங்களால் "ஈச்வரன்" என்ற நாமம் பரமேச்வரன் ஒருவனுக்கே அமையும் என்று பாடினார்.

"சிவனே பரம்" என்ற தத்வத்தை எல்லாப் பசுக்களும் அறிந்து, பாசத்தினின்றும் நீங்கி, பதியின் திருவடிப் பேற்றையடையவேண்டு மென்பதுதான் மானிட ஜன்மத்தின் பயன். இந்த உண்மையை இச்சிறு புத்தகம் நன்றாக அறிவுறுத்துகிறது.

சிவ பக்தாக்ர கண்யரான விஷ்ணுவின் அவதாரமாகவும், சைவஸ்தாபன ஆசார்யவர்யராகவும் புவியில் தோன்றி, மாயை வசப்பட்ட மானிடர்க்கு மாயாநிதனான பரமேச்வரன் தத்வத்தை போதித்த ஸ்ரீ ஹரதத்தரை, சிவ துல்யராகவே பாவித்து வணங்கிப் போற்றவேண்டியது நம் கடமை.

ஸ்ரீ ஹரதத்தர் நாமம் வாழ்க !

சிவபக்தியோங்குக !! சிவதத்வம் வாழ்க !!!

சுபம்

உ

# பொருளடக்கம்.


வாழ்த்துரை ... iii

முன்னுரை ... 1

பாயிரம் .. 4

கஞ்சனூர்த் தேவாரம் ... 8

கஞ்சனூர் ஸ்தல மகிமை ... 10

சிவலிங்காஷ்டகம் ... 15

தோடய மங்களம் ... 16

## ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரம்

ஸுதர்சனர் ஜனனம் ... 17

ஸுதர்சனர் பாலலீலை ... 18

ஹரதத்தர் நாமதீக்ஷை ... 21

அய: பீடாரோகணம் ... 25

ஹரதத்தர் விவாகம் ... 28

வாழ்க்கை யற்புதங்கள் ... 30

மோக்ஷ ஸாம்ராஜ்யம் ... 41

சிவோத்கர்ஷ ச்லோகங்கள் ... 44

பஞ்ச ரத்னம் ... 45

தச ச்லோகங்கள் ... 47

ஹரி ஹர தாரதம்யம் ... 50

ஸ்ரீ அய்யாவாள் ச்லோகங்கள் "சிவநாம மகிமை" ... 53

ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதர் ச்லோகங்கள் ... 55

சிவ பஞ்சாக்ஷரீ ஸ்தோத்ரம் ... 55

பஞ்சாக்ஷர மகிமை ... 56

விபூதி மகிமை ; ருத்ராக்ஷ மகிமை ... 58

சிவதரிசனம் ; மங்களம் ... 60

# முன்னுரை

சிவநேயச் செல்வர்காள்,

शिव एको ध्येयः शिवंकरः

सर्वमन्यत्परित्यज्य समाप्ताथर्वशिखा ॥

என்று சிரோவேதமாகிய அதர்வண வேதம் ஸாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரன் ஒருவனே ஸகல தேவதைகளாலும் பூஜிக்கப்படுபவன், அவனே மங்களத்தைச் செய்பவன், என்று அவனுடைய பரத்வத்தை உத்கோஷிக்கிறது.

त्रिमूर्त्यातीतमायो शिवः ।

शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम् ।

मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् ।

शिवं शान्तं अद्वैतं चतुर्थं मन्यन्ते ।

स आत्मा स विज्ञेयः ।

என்ற மகா வாக்யங்களும் சிவனுடைய பரத்வத்தை நிரூபிக்கின்றன. இந்தக் காலத்தில் வேதம் படித்த பரம்பரையில் வந்து, ஸ்மார்த்தர் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பிராம்மணர்களிற் பெரும்பாலோர் சிவபக்தியிற் குறைந்து இதர தேவதைகளுக்குப் பரத்வமும், நித்யத்வமும் கொடுத்து மயங்குகிறார்கள் என்பது பிரத்யக்ஷம். ஸுமார் 500 வருஷங்களுக்குள் வாழ்ந்திட்ட பிரம்மஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர், பிரமஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர், பிரம்மஸ்ரீ அய்யாவாள் முதலிய மகான்கள் சிவபக்தியிற் சிறந்து விளங்கி, சிவபரத்வத்தைப்பற்றியும் சிவநாம மகிமையைப்பற்றியும் அனேக கிரந்தங்களை எழுதி யிருக்கிறார்கள். அந்த உயர்ந்த கிரந்தங்களைத் தற்காலத்தில் எத்தனை சாஸ்திரக்ஞர்கள் எத்தனை யிடங்

களில் பிரசாரம் செய்கிறார்களென்று அடியேன் சொல்லத் தேவையில்லை! சைவசமயாசார்யாரான திருநாவுக்கரசு ஸ்வாமிகள்

"சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்"

என்று திடபுத்தியுடன் சிவபக்தியில் நிலைத்திருந்தார். இக்காலத்தில் அனேகம் பிராம்மணர்கள் "எல்லாம் ஒன்று" என்று சொல்லிக்கொண்டு, சிவபக்தி தவிர, இதர தேவதா பக்தியில மனதைச் செலுத்துகிறார்களென்றால், பூர்வம் ஆறு மகரிஷிகளின் சாபவிசேஷத்தைத் தவிர வேறு காரணம் சொல்வதற்கில்லை.

இந்த ஹரதத்த சிவாசாரியார் என்பவர் பழுக்கக் காய்ச்சிய இரும்பு பீடத்தின்மீ தமர்ந்து, வேதாகம சாஸ்திர ஆதாரங்களுடன் சிவபரத்வம் ஸ்தாபித்த அதிசயத்தைக் கண்டபின், அவர் காலத்தில் வாழ்ந்த வைஷ்ணவர்கள்கூடச் சைவர்களாக மாறினார்கள். ஆகவே அவருடைய மகிமை வாய்ந்த சரித்ரத்தைக் கேட்டு, தற்காலத்து விபூதியிட்ட பிராம்மணர்களிற் சிலராவது, சிவபக்தியி லீடுபடமாட்டார்களா வென்ற ஒரே நோக்கத்துடன் ஸ்ரீ ஹரதத்தர் சரித்திர ப்ரஸங்கம் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றது.

இந்தக்காலத்தில், சுருதியாதாரங்களுடனும், அஸஞ்சலமான சிவபக்தியுடனும் சிவபரத்வத்தை ஸ்தாபிததுவரும் மகானொருவர் இருக்கிறாரென்றால் அவர் பிரம்மஸ்ரீ உபந்யாஸ ரத்னம் திருவையாறு கணபதி சாஸ்திரிகள் ஒருவர்தாம். அவர் பிரஸங்கங்கள் கேட்ட பலர் சிவபக்தியில் ஈடுபட்டு, அவரிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றுப் புனிதர்களாகியிருக்கிறார்கள்.

அவர் பிரஸங்கங்களைக் கேட்க ஸந்தர்ப்பமில்லாத ஜனங்கள், ஹரதத்தர் சரித்திரத்தைப் படித்தாவது சிவபக்தியி லீடுபடவேண்டுமென்ற நோக்கத்

## முகவுரை

துடனிச் சிறுபுத்தகம் வெளியிடலாயிற்று. கல்வி கேள்விகளில் மிகச் சிறியவனாகிய அடியேன் ஸர்வக்ஞரான ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரத்தை எழுதத் துணிந்த காரணம் சிவபக்தி ப்ரசாரத்தில் அடியேனும் என் சிற்றறிவுக்கெட்டிய விதம் ஏதேனும் கைங்கர்யம் செய்ய வேண்டுமென்ற பேராசைதான். சிவநேயச் செல்வர்கள் குற்றங் குறைகளை மன்னித்து இது சைவஸ்தாபன ஹரதத்தாசார்ய வர்யரின் புனிதமான சரிதம் என்று இதை ஆமோதிப்பார்களாக!

இந்தச் சிறிய தொண்டில், எனக்கு அவ்வப்போது ஸகலவிதமான உதவிகளும் செய்துவந்த எனது ஆப்த நண்பர், சைவத் திருவாளர். கயப்பாக்கம். ஸோமஸுந்தரஞ் செட்டியார் அவர்களுக்கும் இதை வெளியிடுவதற்கு முன்பணம் கொடுத்து உதவிய ஸ்ரீமான் A. S. ராமச்சந்திரய்யர் அவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஹரதத்தர் சரித்திரம் பரம இதிகாஸமாகிய சிவரஹஸ்யம் ஒன்பதாவது அம்சத்தில் 73 ச்லோகங்களாலும், பவிஷ்யோத்தர புராணம் சிவபக்த மான்மியத்திலே 54 முதல் 65 முடிய 12 அத்யாயங்களில் 895 ச்லோகங்களாலும் கூறப்பட்டிருக்கின்றது.

இதில் ஸ்ரீ ஹரதத்தர் எழுதிய சிவபரத்வ ச்லோகங்கள் "பஞ்சரத்னம்" அதற்கு ஸ்ரீ சிவஞான ஸ்வாமிகள் செய்த தமிழ் மொழிபெயர்ப்பு, சிவஸ்துதிகள், தேவாரங்கள் எல்லாம் சேர்த்திருக்கிறபடியால் இதை ஓர் பாராயண புஸ்தகமாகவும் யாவரும் கொள்ளலாம்.

சிவனருள் பெறுக! சிவபக்தி யோங்குக!!

சென்னை.
10-10-48

தி. வி. அ.

ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரம்

# பாயிரம்

## விநாயகர் துதி

சீர்பூத்த திருமறு மார்புடையவனே
பரமென்னச் செருக்குற்றோர்கள்
கார்பூத்த சிந்தையிடி விழுமாறு
கண்ணின்கொள் கரியபொல்லா
நீர்பூத்த விழியின் மலைப்பாம்பென்னு
முருவமதை நீக்கியாண்ட
வேர்பூத்த வைங்கரத்துப் பெம்மான
தடிமலரை யிறைஞ்சி வாழ்வாம்.

[பானுகவி]

## ஸுப்ரமண்யர் துதி

சூராட்டுப் பயில்சயிலத் துணைமூலத்திண்
டகுவியர்மை தோயும் வாட்கணு,
நீராட்டுப் பெறமற நீடவுணர்...
புலவலகை நிறையத் தேக்கிப்
பாராட்டுத் தரவடிவேல் படைபணித்த
கரனரன்பார்ப் பதிக்குச்செல்வச்
சீராட்டுப் பிள்ளையெனு முருகன் முரு
கவிழ்மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம்.

[சிவராத்ரிபுராணம்]

## பரமேச்வரன் துதி

அங்கணு போற்றி வாய்மை யாரணு போற்றி நாக
கங்கணு போற்றி மூலகாரணு போற்றி நெற்றிச்
செங்கணு போற்றி யாதிசிவ பரஞ்சுடரே போற்றி
எங்கணுயகனே போற்றி யீறிலா முதலே போற்றி.

[திருவிளையாடற் புராணம்]

## வாழ்த்து கவிகள்

### அம்பிகை துதி

எழிலுறு வைகுந்தமதி லேய்ந்தவனே பரமென்ன
விசைப்போர் சிந்தை
வழியிலுறு மகந்தையுடன் வாழ்நாளு மகன்றொழிய
வலிய பொல்லா
மொழியதனு லரிமகனை யிறக்குமா றுரைசெய்த
முகின்மென் கூந்தற்
பழிதபுநல் லுமையவடன் வனிஜமல ரடியிணையைப்
பணிந்து வாழ்வாம்.

[பானுகவி]

### தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

ஆல்வருக்கந் தனிலுயர்ந்த வடநிழற்கே
தென்முகங்கொண்டு, அறவோராய
நால்வருக்கு ளிருவருக்கு மொருவருக்கு
நவின் றருளி, நவிலொணுத
நூல்வருக்க மொருவருக்கு நுவலாம
லுவனுரூனை நுதற்கண்ணனைப்
பால்வருக்கைக் கனியையருட் பசுந்தேனைப்
பரவாமற் பரவல் செய்வாம்.

[திருக்குற்றுலப் புராணம்]

### நந்திதேவர் துதி

ஐயிரு புராண நூல் அமலர்க் கோதியும்
செய்யப்ன் மறைகளும் தெரிந்தும் மாயையால்
பொய்யறு சூள்புகல் வியாதன் நீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

[ஸ்காந்தம்]

### சண்டேசரும் மற்ற அடியார்களும்.

தந்தை தாளொடும் பிறவித்தாளெறிந்து
இருந்த ஈருதாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி
பக்திநெறி வழாது வாய்மெய்

*சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச்*
*சிவானுபவச் செல்வராகிப்*
*பந்தமாம் தொடக்கறுத்த திருத்தொண்டர்*
*தாள்பரவிப் பணிதல் செய்வாம்.*

[திருவிளையாடற் புராணம்]

## நால்வர் துதி

*பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி*
*ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி*
*வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி*
*ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.*

[உமாபதி சிவம்]

## ஹரதத்தர் துதி

*ஏறாகிப் பூணணியா மென்பாகி அன்பாகி*
*எழில்கொள் மேனி*
*நீறாகிப் பூந்தொடையா நிலையாகித் தலையாகி*
*நிமலன் பாலோர்*
*கூறாகிப் பவளவிதழ்க் கொம்பாகி யம்பாகிக்*
*குலவி யீசன்*
*பேறாகியுறத்தவஞ்செய் சக்கீரமா லடிமலரைப்*
*பேணி வாழ்வாம்.*

[பானுகவி]

---

ஸ்ரீ கணபதி துணை

## ஸ்ரீ ஹரதத்தர் ஸ்துதி-கீர்த்தனை

ராகம் : சங்கராபரணம்; தாளம் : சாபு

### பல்லவி

ஹரதத்த சிவாசார்யார்-அடிமலர் துதித்து நாம்
ஹரனருட் செல்வத்தை-அடைவோமே.

முரஹரி பிரம்மர்கள்-முதலானோர் பூஜிக்கும்
பரம ஈச்வரன்பாத-பத்மத்தில் சேர்க்கவல்ல

சரணங்கள்

மகதேவன் ஆணையால்-மாலின் ஓர் அம்சமாய்
ஜகந்தனில் பிறந்திட்டான்-சைவனாய்த் திகழ்ந்
திட்டான்
உகந்தவன் பக்திக்கே-உமைபாகர் மலர்க்கையால்
ஸகல சாஸ்திரஞான-சக்ரம் எழுதப்பெற்ற

ராகம் : ஆனந்தபைரவி ; (2) தாளம் : சாபு

ஐந்துவயதில் பாலனை-அறபுதத் தேனைக்கண்ட
விந்தையதனை யற்பன்-விளம்பவும் கூடுமோ
எந்தையார் திருமேனி-இறுகத் தழுவப்பெற்றான்
வெந்தீவினைகள் தீர்க்கும்-வெண்ணீறு பூசப்பெற்ற

ராகம் : தோடி ; (3) தாளம் : சாபு

சுத்தஸ்படிக லிங்கமும்-ருத்திராக்ஷமும பெற்றான்
சித்த சுத்தியுடன் பாலன்-சிவகாம தீக்ஷைபெற்றான்
முக்தி தரும தக்ஷிணா-மூர்த்தியால் உயர் பஞ்ச
அக்ஷர உபதேச-அனுக்ரஹமும் பெற்ற

ராகம் : காம்போதி ; (4) தாளம் : சாபு

வரதன் ஸந்நிதன்னில்-வைணவர் வளர்த்த தீயில்
உருகக் காய்ந்து ஜ்வலித்த-இரும்புப்பீடமதனமேல்
இருந்து இனிதமர்ந்து-எல்லோரும் இனப வெள்ளம்
பருகும வண்ணம் சிவ-பரத்வம் ஸ்தாபித்து வென்ற

ராகம் : கல்யாணி ; (5) தாளம் : சாபு

மஞ்சுமங்கை கமலையை-மணந்து நல் மக்களுடன்
நஞ்சுண்டவர் புகழ்பாடி-நல்லதோர் தைமாதச் சுக்ல
பஞ்சமி தினந்தன்னில்-பரமன் விமானத்தில்
கஞ்சனூர் வாழ்ந்தோரைக்-கைலைக் கழைத்துச்
[சென்ற

## கஞ்சனூர்த் தேவாரம்

### திருநாவுக்கரசு ஸ்வாமிகள் அருளிய திருத்தாண்டகம்

[திருச்சிற்றம்பலம்]

மூவிலைநற் சூலம்வல னேந்தினானை
    மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்திதன்னை
நாவலனை நரைவிடையொன் றேறுவானை
    நால்வேத மாறங்க மாயினானை
ஆவினிலைந் துகந்தானை யமரர்கோவை
    யயன்திருமா லானானை யனலோன்போற்றும்
காவலனைக் கஞ்சனூர் ஆண்டகோவைக்
    கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே (1)

தலையேந்து கையானை யென்பார்த்தானைச்
    சவம் தாங்கு தோளானைச் சாம்பலானைக்
குலையேறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
    கோணாக மசைத்தானைக் குலமாங்கைலை
மலையானை மற்றொப்பா ரில்லாதானை
    மதிகதிரும் வானவரும் மாலும் போற்றும்
கலையானைக் கஞ்சனூர் ஆண்டகோவைக்
    கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே (2)

தொண்டர்குழாந் தொழுதேத்த வருள்செய்வானைச்
    சுடர்மழுவாட் படையானைச் சுழிவான் கங்கைத்
தெண்டிரைகள் பொருதிழிசெஞ் சடையினானைச்
    செக்கர் வானொளியானைச் சேராதெண்ணிப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வியெல்லாம்
    பாழ்படுத்துத் தலையறுத்துப் பற்கண்கொண்ட
கண்டகனை க் கஞ்சனூர் ஆண்டகோவைக்
    கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (3)

விண்ணவனை மேருவில்லா வுடையான்றன்னை
    மெய்யாகிப் பொய்யாகி விதியானானைப்
பெண்ணவனை ஆணவனைப் பித்தன்தன்னைப்
    பிணமிடுகா டுடையானைப் பெருந்தக்கோனை

எண்ணவனை யெண்டிசையுங் கீழுமேலு
மிருவிசும்பு மிருநிலமு மாகித்தோன்றும்
கண்ணவனைக் கஞ்சனூ ராண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (4)

உருத்திரனை யுமாபதியை யுலகானானை
யுத்தமனை நித்திலத்தை யொருவன்றன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பினானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்துநின்ற
நெருப்பதனை நித்திலத்தின் றொத்தொப்பானை
நீறணிந்த மேனியராய் நினைவார்சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே (5)

ஏடேறு மலர்க்கொன்றை யரவுதும்பை
யிளமதிய மெருக்குவா ளிழிந்த கங்கை
சேடெறிந்த சடையானைத் தேவர்கோவைச்
செம்பொன்மால் வரையானைச் சேர்ந்தார் சிந்தைக்
கேடிலியைக் கீழ்வேளூ ராளுங்கோவைக்
கிறிபேசி மடவார்பெய் வளைகள் கொள்ளுங்
காடவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (6)

நாரணனு நான்முகனு மறியாதானை
நாலவேதத் துருவானை நம்பி தன்னைப்
பாரிடங்கள் பணிசெய்யப் பலிகொண்டுண்ணும்
பால்வணனைத் தீவணனைப் பகலானானை
வார்பொதியு முலையாளோர் கூறன்றன்னை
மானிடங்கை யுடையானை மலிவார் கண்டங்
கார்பொதியுங் கஞ்சனூ ராண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (7)

வானவனை வலிவலமு மறைக்காட்டானை
மதிசூடும் பெருமானை மறையோன்றன்னை
ஏனவனை யிமவான்றன் பேதையோடு
மினிதிருந்த பெருமானை யேத்துவார்க்குத்

தேனவனைத் தித்திக்கும் பெருமான் றன்னைத்
தீதிலா மறையவனைத் தேவர் போற்றும்
கானவனைக் கஞ்சனூ ராண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (8)

நெருப்புருவு திருமேனி வெண்ணீற் றானை
நினைப்பார்த நெஞ்சானை நிறைவா னானைத்
தருக்கழிய முயலகன்மேற் றாள்வைத்தானைச்
சலந்தரனைத் தடிந்தானைத் தக்கோர்சிந்தை
விருப்பவனை விதியானை வெண்ணீற் றானை
விளங்கொளியாய் மெய்யாகி மிக்கோர்போற்றும்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (9)

மடலாழித் தாமரையா யிரத்திலொன்று
மலர்க்கணிடந் திடுதலுமே மலிவான்கோலச்
சுடராழி நெடுமாலுக் கருளசெய்தானைத்
தும்பியுரி போர்த்தானைத் தோழன்விட்ட
அடலாழித் தேருடைய விலங்கைக் கோனை
யருவரைக்கீ ழடர்த்தானை யருளார்கருணைக்
கடலானைக் கஞ்சனூர் ஆண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## கஞ்சனூர் ஸ்தல மகிமை.

ஸ்ரீ கஞ்சனூரென்னும் சிவஸ்தலம் தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுக்காவில், காவேரி நதிக்கு வடகரையில் இருக்கிறது. அதில் கோயில் கொண்டிருக்கும் ஈச்வரன் திருநாமம் ஸ்ரீ அக்னீச்வரர். ஒரு ஸமயம் அக்னிபகவான் மகாலிங்கத்தைப் பூஜித்து அருள் பெற்றபின் தன்பெயரை வகிக்க வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்க, பகவா னவர் பிரார்த்தனை

யையேற்று அக்னீச்வரர் என்ற பெயருடன் விளங்கு கிறார். அம்பிகையின் திருநாமம் ஸ்ரீ கற்பகாம்பிகை. (அடியவர்களுக்குக் கேட்டதையெல்லாம் குறை வறக் கொடுக்கும் கற்பகம் போன்ற பார்வதியம்மை.) பிராகாரத்தில் சிவாலயங்களிருக்கும் தக்ஷிணாமூர்த் திக்கு ஸமீபமாக இரண்டாவது தக்ஷிணாமூர்த்தியிருக் கிறார். இவர்தான் ஸ்ரீ ஹரதத்தருக்குப் பஞ்சாக்ஷரம் உபதேசம் செய்து, ஸ்படிக லிங்கம் கொடுத்துச் சிவ பூஜா விதியையும் சொன்ன மூர்த்தியாவர். நடராஜா விற்கும் சிவகாமியம்மைக்கும் மூல விக்ரஹங்கள் இருக்கின்றன (மூலஸ்தானம் இருப்பது வெகு அரிது)

ஸ்ரீ ஹரதத்தாசாரியார், அவர் பத்னி, அவர் புத் ரர்கள் மூவர், இவர்களுக்கும் உற்சவ விக்ரகங்கள் இருக்கின்றன. உற்சவ காலங்களில் பஞ்சமூர்த்திக ளுடன் ஸ்ரீ ஹரதத்தர் விக்ரஹங்களுக்கும் புறப்பாடு உண்டு

கோயிலினின்றும் காவிரிக்குப் போகும் திரு வீதியில் ஸ்ரீ ஹரதத்தர் கோயில் இருக்கிறது. அதில் சிவலிங்கமும், பக்கத்தில் பூஜை செய்யும் ஹரதத்தர் விக்ரஹமும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

பிரதி வருஷமும் தை மாதம் சுக்ல பஞ்சமியில், பகவான் ஹரதத்தரைக் கைலாஸத்திற் கழைத்துச் சென்ற உற்சவம் வெகு விமரிசை.

ஹரதத்தர் சிவபரத்வம் ஸ்தாபித்த வரதராஜப் பெருமாள் கோவில், ஹரதத்தர் கோவிலுக்கு மேற் கில் கொஞ்சதூரத்துக்கப்பால் இருக்கிறது. இந்தக் கோவிலில் சிவலிங்கம் ஒன்று இருந்து பூஜிக்கப்பட்டு வருவது, ஒரு பெருஞ் சிறப்பு. பக்கத்தில் கற்பகாம் பிகையும் எழுந்தருளியிருக்கிறாள். இருவரும், பழுக் கக் காய்ச்சிய இரும்பு பீடத்தின்மீது அமர்ந்து ஹர

தத்தர் சிவபரத்வம் ஸ்தாபித்தபோது காக்ஷியளித்த மூர்த்திகள் ஆவர்.

ஈச்வரன் கோயிலில், கம்ஸன், இந்திரன், பிரம்மா விஷ்ணு எல்லாரும் அக்னீச்வரைப் பூஜித்து அவரவர் பெயரால் ஸ்தாபித்த பல லிங்கங்களும் இருக்கின்றன. கஞ்சனூர் தேவஸ்தானத்தார் வெளியிட்ட "கஞ்சனூர் ஸ்தல புராணம்" என்னும் அரிய நூலில் (விலை தபாற்கூலியுள்பட 3 அணாதான்) இந்த ஸ்தலத்தின் மகிமைகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இங்கு ஸ்ரீ ஹரதத்தர் சரித்திர ஸம்பந்தமாயுள்ள மகிமையை மாத்திரம் சிறிது குறிப்பாம்.

ஒரு ஸமயத்தில், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் அஸுரர்கள் தோல்வியுற்று, அஸுரகுருவான பிருகு மகரிஷியின் ஆச்ரமம் சென்று, குரு வெளியிற் போயிருந்தபடியால், அவர் பத்னியைச் சரணடைந்து அவ்வுதவியால் அபயமளிக்கப் பெற்றார்கள். தேவர்களுக்கு உதவி செய்த திருமால் அஸுரர்களைத் துரத்திக்கொண்டு பிருகு மகரிஷியின் ஆச்ரமம் போனார். அங்கு முனிவரின் பத்னி, முனிவர் வெளியே போயிருப்பதாகவும், அஸுரர்களுக்குத் தான் அபயமளித்திருப்பதாகவும் சொல்லியும்கூட விஷ்ணுவானவர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், சக்ராயுதத்தைப் பிரயோகம் செய்தார். அந்தச் சக்ரமானது அஸுரர்களைக்காக்கும்பொருட்டு முன்வந்த ரிஷிபத்னியின் சிரஸை யறுத்துத் தள்ளியது. அதே ஸமயம் வெளியே போயிருந்த பிருகு மகரிஷி திரும்பிவந்து, விஷ்ணுவின் அடாத செயலைக் கண்டு சினம்கொண்டு, பலவிதமான குத்ஸித யோனி ஜன்மங்கள் அனேகம் எடுக்கும்படி விஷ்ணுவிற்குச் சாபம் கொடுத்தார். விஷ்ணு அச்சாபத்தைக் கேட்டு நடுநடுங்கி நின்றார். மகா சிவபக்தரான பிருகு முனிவர், பஞ்சாக்ஷரம் ஓதித் தன் மனைவியை,

விஷ்ணு பார்த்துக்கொண்டிருக்கும் போதே உயிர்ப் பித்துக்கொண்டார்.

சபிக்கப்பட்ட விஷ்ணு தனது சாப விமோசனார்த்தம், மந்தர மலைச் சாரலில், பஸ்மாங்கிதராய் பரமசிவனைக் குறித்து ஆயிரம் தேவ வருஷம் கடுமையான தவம் செய்தார். பரமசிவன் ரிஷபாரூடராய் பிரத்யக்ஷமானார். விஷ்ணுவும் அவரைக் கண்டு பலவாறு துதித்து, பிருகுவின் சாபத்தைத் தெரிவித்துக் கொண்டார். அப்பொழுது பகவான் "குழந்தாய்! எனது பக்தருக்குச் செய்த துரோகம் எனக்கும் செய்ததாகும். இதுகாறும் நீ செய்த தவத்தால் எனக்குச் செய்த துரோகம் நீங்கும்படி அருள் செய்தேன். காவேரிக்கு வடகரையில் கஞ்சனூர் என்ற திவ்ய க்ஷேத்ரத்தையடைந்து, அங்கு தவம் செய்வாயாகில், பிருகுமகரிஷியின் சாபம் கொஞ்சம் சமனமடையலாம்" என்றருள, அதே பிரகாரம் விஷ்ணுவானவர் கஞ்சனூர் க்ஷேத்ரத்தையடைந்து விபூதி ருத்ராக்ஷமணிந்து, பின்னும் பல்லாயிர வருஷங்கள தவம் செய்தார். அவருடைய பிரம்மரந்திரத்தினின்றும் கிளம்பின தபோக்னி மூன்று லோகங்களையும் வியாபிக்க ஆரம்பித்தது. கடவுள் கருணை கூர்ந்து பிரத்யக்ஷமாகி, வேண்டிய வரத்தைக் கேட்கும்படியருள, விஷ்ணுவானவர் பிருகு ரிஷியின் சாபத்தைத் தெரிவித்துக்கொண்டார். அப்பொழுது பகவான் "அப்பனே! எமது பக்தர் சாபத்தைக் கடத்தல் யாவர்க்கும் அரிது ஆயினும் எமதருளால், உனது ஜன்மங்களை 25 ஆகக் குறைப்போம். அதில் மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரஸிங்கம், தன்வந்திரி, மோகினி நாரதா, பிருது ஸனத்குமாரர், விராட்டு இந்தப் பத்து அவதாரங்களும் ஆவிர்ப்பாவமாகுக. பார்க்கவர், ராமர், பரசுராமர், கிருஷ்ணர், வியாஸர், பலபத்ரர், கபிலர், நரநாராயணர், யஞ்ஞர், வாமனர், தத்தாத்ரேயர், விருஷபர், புத்தர், கற்கி, ஸுதர்சனர், என்

னும் பதினைந்து அவதாரங்களும் யோனிஜமாகுக. இந்த 25 அவதாரங்களும் லோகோபகாரமாக ஏற் படட்டும். ஐந்து அவதாரங்களில் நீ கர்வமடைய உனது கர்வத்தை நாசம் செய்து ஆட்கொள்வோம். மற்ற 20 அவதாரங்களில் நீ எமது பக்தனாய் எம்மைப் பூஜை செய்வாய். உனது பூஜையை ஏற்று விரும்பி யது அருள்வோம்" என்று பிருகு முனிவரின் கொடிய சாபத்தைச் சமனம் செய்தருளினார். விஷ்ணுவும் தலை வணங்கிநிற்கையில் பகவான் பின்னும் சொல்வார்.

"முன்னொரு ஸமயம், நீயும் நாரதருமாகச் சென்று திரிபுரங்களில புருஷர்களுக்கு வேத மார்க்கங்களை நம்பவேண்டாமென்று போதித்து, சிவபூஜையில் நம் பிக்கையிழக்கும்படிச் செய்து, ஸ்திரீகளைப் பதிவிரதா தர்மம் குறையும படிக்கும் செய்த பாபம் இன்னும் உன்னைத் தொடர்ந்து நிற்கிறது. சிவாபராதத் துக்குப் பிராயச்சித்தமே கிடையாது. ஆயினும் நீ நமது பிரதம பக்தனாக விருக்கிறபடியால் ஓர் பிராயச் சித்தம் சொல்வோம். சிவாபராதம் செய்த பாபத் தைச் சிவபரத்வம ஸ்தாபித்துப் போக்கிக் கொள் வாய் ஒருகாலத்தில், இதே கஞ்சனூரில் வைஷ்ண வர்கள் சிவநிந்தா பராயணர்களாக வாழ்வார்கள்; அவர்கள் குலத்தில் நீ அவதரித்து, சிவபரத்வம் ஸ்தா பித்து, சுருதியாதாரங்களுடன் சைவக் கிரந்தங்கள் செய்து கடைசியில் நமது லோகம் அடைவாயாக." என்று சிவாபராதத்திற்கும் இக்கஞ்சனூரிலேயே பாபவிமோசனத்தையும் அருளி மறைந்தார். திருமா லும் மகாதேவன் அருளியபடி காலக்ரமத்தில் பதி னைந்து அவதாரங்களில் ஓர் அவதாரமாகக் கஞ்சனூ ரில் வைஷ்ணவ குலத்திற் பிறந்து சிவபரத்வம் ஸ்தா பித்து சிவஸாயுஜ்ய பதவியடைந்தார்.

சுபம்

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY, TIRUVANMIYUR :: MADRAS-41 L0281 15

शिवलिङ्गाष्टकम्

ब्रह्ममुरारिसुरार्चितलिङ्गं निर्मलभाषितशोभितलिङ्गम् ।
जन्मजदुःखविनाशकलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

देवमुनिप्रवरार्चितलिङ्गं कामदहनकरुणाकरलिङ्गम् ।
रावणदर्पविनाशकलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

सर्वसुगन्धिसुलेपितलिङ्गं बुद्धिविवर्धनकारणलिङ्गम् ।
सिद्धसुरासुरवन्दितलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

दक्षसुयज्ञविनाशनलिङ्गं कनकमहामणिभूषितलिङ्गम् ।
फणिपतिवेष्ठनशोभितलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

कुङ्कुमचन्दनलेपितलिङ्गं पङ्कजहारसुशोभितलिङ्गम् ।
सञ्चितपापविनाशकलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

देवगणार्चितसेवितलिङ्गं मानवभक्तिभिरेवच लिङ्गम् ।
दिनकरकोठिप्रभाकरलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

अष्टदलोपरिवेष्ठितलिङ्गं सर्वसमुद्भवकारणलिङ्गम् ।
अष्टदरिद्रविनाशनलिङ्गं तत्प्रणमामि सदाशिवलिङ्गम् ॥

सुरगुरुसुरवरपूजितलिङ्गं सुरवनपुष्पसदार्चितलिङ्गम् ।
परंपरं परमात्मकलिङ्गं तत्प्रणमामि सदाशिव लिङ्गम् ॥

लिङ्गाष्टकमिदं पुण्यं यःपठेत् शिवसन्निधौ ।
शिवलोकमवाप्नोति शिवेन सह मोदते ॥

## திருமூலர் திருமந்திரம்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## அப்பர் தேவாரம்

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

## தோடய மங்களம்

ஜய சங்கர ஸதாசிவ-தேவ தேவ மகா தேவா
ஜய சின்மயானந்த ரூபா-ஜய மகானுபாவா

ஜய பார்வதி மனோஹர-ஜகதீச்வர புரஹர
ஜய ஸுந்தர மதகர-ஜய கருணாகரா (ஜய-ஜய)

ஸுப்ரகாச ஜகதீச-ஸோம சேகரவுலாஸா
சிதபராபர விலாஸ-ஸ்ரீ கைலாஸவாஸா (ஜய-ஜய)

# ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரம்

## உபமன்யு மகரிஷி நைமிசாரண்ய வாஸிகளுக்கு சொன்ன பிரகாரம்

---

## அத்யாயம் 1

### ஸுதர்சனர் ஜனனம்

புண்ணிய நதியாகிய காவேரியின் வடகரையில் கஞ்சனூர் என்று ஓர் சிவஸ்தலமிருக்கிறது. அந்த ஸ்தலத்தில் இன்றைக்கு ஸுமார் ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஒரு தெருவில வைஷ்ணவர்களும் மற்றொரு தெருவில் சிவபக்தர்களும் வாழ்ந்துவந்தார்கள். வைஷ்ணவர்களுக்கெல்லாம் ஆசார்யராகவிருந்தார் வாஸுதேவர் என்ற ஓர் பிராம்மணர். அவர் மகாவிஷ்ணுவிடம் பரமபக்தியுள்ளவர். மகாவிஷ்ணுவே தனக்குப் புத்ரனாகப் பிறக்கவேண்டுமென்று தவம் செய்தார். பக்கத்து அகரஹாரத்தில் வசித்த சிவபக்தர்களுள் ஒருவர், ஸுப்ரதீகா என்பார், தனக்கு ஓர் ஸத்புத்ரி வேண்டித் தவமிருந்தார். இவ்விருவர் தவத்திற்கும் மகாவிஷ்ணுவானவர் திருப்தியடைந்து, ஏற்கனவே பரமசிவனது ஆக்ஞையும் அருளும் இருந்தவண்ணம், தனக்கேற்பட்ட 15 அவதாரங்களில் ஒன்றான ஸுதர்சனவதாரமாக வஸுதேவருக்குப் புத்ரராக அவதரிக்கத் திருவுளம் கொண்டார். மகாலக்ஷ்மியையும் ஸுப்ரதீகருக்குப் பெண்ணாகப் பிறக்கும்படி சொன்னார். அதேப்ரகாரம், வஸுதேவருடைய பத்னி கர்ப்பமாகி, காலக்ரமத்தில் ஓர் சுபதினத்தில், ஐந்து கிரஹங்கள் உச்சமாகவிருந்த ஓர் சுபலக்னத்

தில் மகாவிஷ்ணுவின் அவதாரமாய் ஓர் புத்ரனைப் பெற்றாள். அந்த வேளை புஷ்பமாரி பெய்தது. சிவ பக்தர்களுக்கு வலது புஜமும், வலது காலும், வலது கண்ணும் துடித்தன. வைஷ்ணவர்களுக்கோ இடது புயமும் இடது காலும் இடது கண்ணும் துடித்தன. ஆனால் இந்த ஸூசகங்களின் உண்மையை அப்போது யாரும் அறியவில்லை.

'புத்ர ஜனனம் ஆனதைக் கேட்ட வாஸுதேவர் பரம ஸந்தோஷமடைந்து பூதானம கோதானம் முத லியன செய்தார். பதினோராம் நாள் புண்யாக வச னம் செய்து, பெரியோர்களைக்கொண்டு குழந்தைக்கு ஸுதாசனர் என்று நாமகரணமும் செய்வித்தார்.

---

## அத்யாயம் 2

### ஸுதர்சனர் பாலலீலை

ஸுதர்சனர் என்ற குழந்தை வளர்பிறைச் சந்தி ரனைப்போல் வளர்ந்துவந்தது. இரண்டு வயதாகி வெளியில் நடக்கும பருவம் வந்தபோது, குழந்தை விபூதி ருத்ராக்ஷம் அணிந்தவர்கள் வசித்த பக்கத்துத் தெருவிற்கு அடிக்கடி ஓடிவிடும. அவர்கள் காவேரி யில் ஸநானம் செய்து திரும்பி வருகையில் அவர்க களுக்கு நமஸ்காரம் செய்து அவர்களுடைய பாத தூளிகளைத் தன் சிரஸில் போட்டுக்கொள்ளும். தனக் கும் விபூதியிடும்படிக்கும், ருத்ராக்ஷம் கொடுக்கும் படிககும் அவர்களைப் பிரார்த்திக்கும். இரண்டுவயது குழந்தை இவ்வளவு பக்தியுடன் கேட்பதைப் பார்த் துப பரம ஸந்தோஷமடைந்து ஒவ்வொருவரும் அதற்கு விபூதியிடுவார்கள். சிலர் ருத்ராக்ஷமும் கொடுத்தார்கள். உடனே குழந்தை சிவாலயத்திற்

குப்போய் அக்னீச்வர மகாலிங்கத்தையும் கற்பகாம்பி கையையும் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து ஹரஹர வென்று கோஷிக்கும். வைஷ்ணவ குலத்திற் பிறந்த இச்சிறு குழந்தை விபூதி ருத்ராக்ஷம் தரித்து சிவபக்தியில் ஈடுபட்டதைப் பார்த்த. சைவப்ராம்மணர்க ளெல்லோரும் ஆதியில் மகாதேவனைத் தனது நேத்ர மலரால் பூஜித்த விஷ்ணுவே, உலகத்தில் சிவபக்தியை நிலைநாட்டுவதற்காக அவதரித்தாரோவென்று அதிசயித்தார்கள் குழந்தை சாப்பாட்டுக்காக வீட்டுக்குப் போகும் நேரங்களில் தவிர மற்ற வேளைகளில் சிவாலயத்திலும், சிவபக்தர்களோடும் இருந்து வளர்ந்தது.

குழந்தையின் நடத்தையையும் செய்கைகளையும், வாஸுதேவன் குழந்தையின் விளையாட்டென்றே பல நாள் நினைத்துவந்தான். நாட்கள் செல்லச் செல்ல அவன் மனம் வருந்தியது; குழந்தையைக் குளிப்பாட்டி நல்ல ஆடையுடுத்தி, ஆபரணங்கள் போட்டு, நாமமும் ஸ்ரீ சூர்ணமும் இட்டுத் தாயார் விளையாடவிட்டால், வெளியிற்சென்ற குழந்தை உடனே நாமத்தை யழித்துவிட்டு விபூதி பூசிக்கொண்டு ருத்ராக்ஷமாலை யுடன் வீட்டுக்கு வரும். பிதா குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு " என் கண்ணே, இனிமேல் சிவன் கோவிலுக்குப் போகாதே, இதுபோல் சாம்பலை வாரிப் பூசிக்கொள்ளாதே; நம்முடைய தெய்வமான ஸ்ரீ மகாவிஷ்ணுவின பாதத்தையே பூஜிக்கவேண்டும்; நம் குலத்திறகேறபட்ட ஸ்ரீ சூர்ணம்தான் போட வேண்டும்." என்று அனபுடன் உபதேசிப்பான். ஆனால் குழந்தையின் குணம் மாறவில்லை; வாஸுதேவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

இப்படியிருக்க குழந்தைக்கு ஐந்தாம் வயது வந்தது. வெகு விமரிசையாகப் பூணூல் கல்யாணம் நடத்திவைத்தான். குல ஸம்பிரதாயப்படி த்வாதச நாமங்களும் இட்டு, மறுபடியும் மடியில் வைத்துக்

கொண்டு “ அப்பா ஸுதர்சனு, இதுவரையில் இருந் ததுபோல் இனியும் இராதே. உனக்குப் பூணூல் போட்டாகிவிட்டது. சிவன் கோவிலுக்குப் போனுல் மகாபாபம். விபூதியிட்டவர்களைக் கண்டால் ஸ்நா னம் செய்யவேண்டும். அப்படிக்கிருக்க நீயே விபூதி யிட்டுக்கொள்ளலாமா? இனிமேலாவது நமது குலா சாரப்படி நாமமும் ஸ்ரீ சூர்ணமும் இட்டுக்கொண்டு மகாவிஷ்ணுவைப் பூஜித்துக்கொண்டிரு” என்று பலவாறு உபதேசித்தான்.

சிவபக்தியை ஸ்தாபிக்க வந்த மூர்த்தியின் செவி யில் இந்த உபதேசம் ஏறுமா? பிதா வெளியில் போனதும் பாலனும் வெளியே போய் நாமங்களை யழித்துவிட்டு விபூதியை நன்ருக உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் பூசிக்கொண்டு சிவாலயம் போய் விட்டான். ஸாயந்திரம் விபூதிருத்ராக்ஷத்துடன் வீட் டுக்குத் திரும்பிவந்ததைப் பார்த்த பிதாவிற்குக் கடுங் கோபம் வந்துவிட்டது. அக்ரஹாரத்தில் வைஷ்ண வர்கள் எல்லாரும் தங்கள் குலத்தைக் கெடுக்கவந்த ஓர் கோடாலிக் காம்பென்று குழந்தையைக் கோபித் தார்கள். பையனை ஒரு தூணில் கட்டிவைத்து, சாட் டையால் அடித்தான். அடித்தும் என்ன? பிதா மறைந்த ஸமயம், பாலன் கட்டுகளையவிழ்த்துக் கொண்டு சிவாலயம் போய்விட்டான்.

வாஸுதேவன் நரஸிம்மரூபமாக மாறினுன். புத்ர வாத்ஸல்யம் நீங்கிற்று. பையன் தன் வார்த் தைக்கு அடங்கி நடக்கும் வரையில் வீட்டுக்கு வரக் கூடாதென்றும், அவனுக்கு அன்னம் போடக்கூடா தென்றும் கட்டளை விதித்தான். பெற்றதாய் மனம் நொந்தாள். பாலன் வழக்கம்போல் மத்யான்னம் வீட்டுக்குவந்து “ அம்மா பசிக்கிறது சாதம் போடு” என்று சொன்னுன். பெற்றதாய் மனம் புழுங்கினுள். “ என் கண்ணே, நீ யேனடா அப்பா வார்த்தையைக்

கேட்காமலிருக்கிறாய்? அப்பா மனம் கோணாமல் நீ நடக்கும் வரையில் நீ வீட்டுக்கு வரக்கூடாதென்றும் நான் உனக்கு அன்னமிடக்கூடாதென்றும் விதித்திருக்கிறாரே! அவர் உனக்குப் பிதாவல்லவா? அவர் வார்த்தையை நீ கேட்கவேண்டாமா? அவர் எனக்கு தெய்வமல்லவா? அவர் கட்டளையை நான் எவ்வாறு மீறுவேன்; நீ 'பசிக்கிறது' என்று சொல்ல என் மனம் தவிக்கிறதே; பெற்ற வயிறு ஸங்கடப்படுகிறதே"யென்று பிரலாபித்தாள். பாலன் தாயைப் பார்த்து "அம்மா! அப்பா வார்த்தையின்படி நடப்பதுதான் உங்கள் கடமை நான் வெளியே போகிறேன். உலகத்திற்கெல்லாம் மாதாபிதாக்களான பார்வதி பரமேச்வரரை வழிபடுவேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று தேற்றி, தாயை நமஸ்கரித்து, வெளியே வந்து நேராக அக்னீச்வரர் ஆலயம் சென்றான்.

---

## அத்யாயம் 3

### ஈச்வரானுக்ரஹம்;
### ஹரதத்தர் நாமதீக்ஷை

பாலன் நேராக அக்னீச்வரர் ஆலயம் சென்றான். ஸ்ரீ அக்னீச்வரரையும் கற்பகாம்பிகையையும் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து அக்னீச்வரர் ஆலயத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கெதிரில் தியானத்தில் அமர்ந்தான். பையன் தியானத்தில் அமர்வது ஸகஜமானதால் இரவு பத்துநாழிகைக்கு மேல் கோவில் அர்ச்சகர்கள் கதவைச் சாத்திக்கொண்டு அவர்கள் வீடு சென்றுவிட்டார்கள். சிறிது நேரத்தில் பையன்

எழுந்து நின்று பரமசிவனைப் போற்றுவான் ஆயினன். "ஹே மகாப்ரபோ! நான் தங்களையே சரணமடைந்தேன். என்னுடைய சரீரத்தைப் பெற்றெடுத்த தாய் தந்தையரை விட்டுவந்தேன். ஜகத் பிதாவாகிய தாங்கள்தான் இனி எனக்குப் பிதா. ஜகந்மாதாவாகிய கற்பகாம்பிகையே எனக்கும் மாதா. ஸ்ரீ விக்னேச்வரரும் ஸுப்ரமண்யரும் எனது சகோதரர்கள். பிரதமகணங்கள்தாம் எனது தோழர்கள். அடியேனை ஆட்கொள்ளவேண்டும். பிதா வார்த்தையைக் கேட்காத பையனுக்கு அருள் செய்யமாட்டேன் என்பீரோ அதோ அடுத்த பிரகாரத்தில் சிவாபராதம் செய்த பிதாவின் காலை வெட்டின ஸ்ரீ சண்டேச்வரர் உட்கார்ந்திருக்கிறார் எனது விதி நான் கஷ்டப்படத்தான் வேண்டுமென்பீரோ, விதியைமாற்ற உமக்கு சக்தியுண்டென்பதற்கு ஸாக்ஷியாக மார்க்கண்டேயர் இருக்கிறார்: நான் ஒரு சிறு பையன் விதிப்படி உங்களை பூஜை செய்யவில்லையென்பீரோ, அது என் குறைபாடல்ல, இன்னமும் ஸாக்ஷாத் விஷ்ணு பிரம்மாதியர் தங்கள் திருவடியையும் முடியையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், யாவர் தான் தங்களுக்கு அங்கபூஜை செய்யமுடியும்? தாங்கள் கருணை புரிந்தாலன்றி நான் இவ்விடம்விட்டு அகலேன். இவன் மிகவும் பிடிவாதமுள்ளவனாகவிருக்கிறான் என்று கோபித்துச் சபிப்பீரோ-சாக்கடைப் புழுவாகப் போகும்படி சபித்தாலும் எனக்கு ஸந்தோஷம்தான். இதே இடத்திற்கிடந்து சிவபக்தர்கள் பாதங்களில் நசுக்குண்டு தங்கள் லோகம் வந்து சேர்வேன். நான் இவ்வளவு வேண்டியும் தங்களுக்கு என்மீது கருணையேற்படவில்லையா! என் போன்ற அபலைகளுக்கு அருள் செய்யாவிடில் கிருபா ஸமுத்ரம் என்ற பெயர் தங்களுக்கு நிலைக்குமா? குழந்தை யழுவதைப் பார்த்து மனம் இரங்காத தாய் தந்தையர் உண்டா?" என்று பலவாறு போற்றிப் புகழ்ந்து, இறுதியில் சோர்ந்து விழுந்துவிட்டான்.

பகவான் கற்பகாம்பிகையைப் பார்த்து புன்முறுவல் பூத்தார். லோகமாதாவாகிய கற்பகாம்பிகையும், குழந்தையை மேலும் சோதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டாள். உடனே பகவான் குழந்தையின் மனப்பான்மையின்படி அதன் சஹோதரர் விக்னேச்வரர் ஸுப்ரமண்யரோடும், அதன் தோழர்கள் பிரதமகணங்களோடும், முனிவர்கள் வேதமோத, தும்புரு நாரதாதிகள் கானம்பண்ண, தேவர்கள் புஷ்பமாரி பெய்ய, பார்வதி தேவியுடன் ரிஷபாரூடராய் காக்ஷியளித்தார். குழந்தையின் கண்களுக்குத் தங்களைத் தரிசிக்கவல்ல சக்தியையும் கொடுத்தார். குழந்தையெழுந்து விழுந்து நமஸ்கரித்து மெய்ம்மறந்து நின்றான். பரமசிவன் பாலனைத் தன் மடிமீதிருத்தி உச்சிமுகர்ந்து, ஆலிங்கனம் செய்துகொண்டார். குழந்தைக்குற்ற துயரம் என்னவென்று கேட்டார். குழந்தையும் ஈச்வர தர்சனம் கிடைத்தபின் தனக்கு யாதொரு குறையும் இல்லையென்று சொல்லிவிட்டான். "அப்பா, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்று சொன்னார். குழந்தையும் அந்தக்ஷணம் முதல பகவானுடைய திருவடிகளைவிட்டுப் பிரியாத வரம் கேட்டான். கற்பகாம்பிகை குழந்தையின் ஞான விசேஷத்தைக் கண்டு மனம் பூரித்தாள். பகவான் "உனக்கு இருந்த வருத்தத்தை நான் அறிவேன் உனக்கு ஸகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி வரும்படி அருள்புரிகிறேன" என்றார். பையன திருப்தியடையவில்லை. "எத்தனை சாஸ்திரங்கள் படித்தாலும் அதன பயன தங்களையறிவதுதானே; தங்களை நேரில் கண்ட அடியேனுக்கு சாஸ்திர ஞானம் ஏதும் தேவையில்லை"யென்று சொல்லிவிட்டான. பகவான் அவனை 'வேண்டும்' நிலைமை வந்துவிட்டது, "குழந்தாய்! பூர்வம் கௌதமர், ததீசி, கண்ணுவர், சியவனர், பிரம்மா நந்தியென்னும் ஷண்முனிகள் ஒவ்வோர் ஸமயம் சிவத்ரோகம் செய்த பிராம்மணர்களை வைதிகநெறி பிறழ்ந்தவர்களாகவும் சிவநிந்தாபராய

ணர்களாகவும், போகும்படிச் சபித்துவிட்டார்கள் இவர்கள் சாபம் கல்ப கல்பங்களிலும் சீறிக்கொண்டிருக்கிறபடியால் ஜனங்கள் சிவபக்தியேற்படாமல் வாழ்ந்துவருகிறார்கள். சாபவசப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தாம், இந்தவூரில் இருக்கும வைஷ்ணவர்களும். ஆகவே ஸகல வேதங்களையும் சாஸ்திரங்களையும் உனக்கு அருள் செய்கிறேன். நீ உலகத்தில் சைவ ஸ்தாபனம் செய்து, வைஷ்ணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சிவபரத்வம் போதித்து, கீர்த்தியுடன் சிலகாலம் வாழ்ந்து வருவாய். காலக்ரமத்தில் உன்னை நான் அழைத்துக்கொள்ளுகிறேன்" என்று அருளி, குழந்தையை "ஸர்வக்ஞோபவ!" என்று அனுக்ரஹித்தார். உடனே ஸகல வேதங்கள், உபநிஷத்துக்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் எல்லாம் குழந்தையில் ஹிருதயத்தில் வந்து லயித்தன. குழந்தைக்கு உபதேசம் செய்யும் பொருட்டு பிரத்யேகமான தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்து, குழந்தைக்குத் தனது மலர்கையால விபூதியிட்டு, ருத்ராக்ஷமாலையணிந்து பஞ்சாக்ஷர உபதேசம் செய்து, ஸ்படிக லிங்கம் கொடுத்து, சிவபூஜா விதியையும் தாமே உபதேசித்தார். 'ஸுதர்சனன்' என்ற பெயரை மாற்றி "ஹரதத்தர்" என்ற திவ்ய சிவ நாம தீக்ஷையும் செய்தார். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள். "இனி நீ உன் கிருஹம சென்று, உன் பிதாவையும் இதர வைஷ்ணவர்களையும் வாதில் வென்று, சிவ பரத்வம் ஸ்தாபித்து, சிவபக்தியை நிலைநாட்டு வாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பையன் பரமானந்தமடைந்து சுருதி வாக்யங்களால் பகவானை ஸ்துதித்தான். பகவான் மறைந்தருள, பையனும் சிவாக்ஞையை மேற்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR MADRAS 41



## அத்யாயம் 4

### அய: பீடாரோகணம்
### சிவபரத்வ ஸ்தாபனம்.

வீட்டில் மனக்கவலையால் தூங்காது விழித்திருந்த தாயார் குழந்தையின் குரலைக் கேட்டதும் ஓடோடியும் போய்க் கதவைத் திறந்து குழந்தையை அணைத்து முத்தமிட்டாள். பிதாவும் எழுந்து வந்தான். பையனுடைய சிவஸ்வரூபத்தைக் காணவே அடங்காக் கோபம் கொண்டு சீறினான். சிவசின்னங்கள் அணிந்த துரோகி தன் வீட்டுக்குள் அடிவைக்கக்கூடாதென்று விரட்டினான். ஹரதத்தரோ, பொறுமையுடனும் புன் சிரிப்புடனும், "ஆறு முனிவர்களின் சாப வசப்பட்ட பிராம்மணர்களில் நீரும் ஒருவர் போலும்! ஸ்ரீ மகா விஷ்ணுவே விபூதி ருத்ராக்ஷமணிந்து சிவபெருமானைத் தனது நேத்ர கமலத்தால் பூஜித்தார் என்ற விஷயம் உமக்குத் தெரியுமோ? அதற்கு ஆதாரமான சுருதியை நீர் படித்திருக்கிறீரோ அல்லது நான் சொல்லவோ?" என்றான்.

பையனுடைய வார்த்தைகளைக் கேட்ட பிதா பிரமித்தான்; திடுக்கிட்டான். ஐந்து வயது பூர்த்தியாகாத பாலன்-சுருதி சொல்லவாவது!! அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. குழந்தை 'ஸர்வக்ஞன்' ஆனதை அவன் எப்படி அறிவான்! குழந்தையை ஏமாற்றிவிடலாம் என்றெண்ணி "விஷ்ணு அவ்வாறு செய்தது யதார்த்த பூஜையல்ல. உலகத்தை ஏமாற்றவே அவ்வாறு செய்தார்" என்றான். குழந்தை "ஓகோ அப்படியா! அதற்குத்தான் ஆதாரமாக ஓர் சுருதி வாக்யம் சொல்லுமே, கேட்போம். விஷ்ணுவிற்கு பரத்வம் சொல்லும் வேதவாக்யங்களைச் சொல்லும் கேட்போம்" என்றான். பிதா 'இது ஏதோ விபரீதமாகவிருக்கின்றதே' யென்று விழித்தான். இதற்குள்

பொழுதுபுலர அக்ரஹாரத்து ஜனங்களும் கூடினார் கள். தர்க்கம் முற்றியது. வைஷ்ணவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் ஹரதத்தர் உடனுக்குடன் பதில் சொன்னார். இந்த அதிசயத்தைக் கேட்ட சைவ ப்ராம்மணர்களும் அங்கே போந்து ஹரஹர கோஷம் செய்து ஹரதத்தரைப் போற்றிப் புகழ்ந் தார்கள்.

வைஷ்ணவர்கள் பார்த்தார்கள், இந்தப் பாலன் உயிருடனிருந்தால் தங்கள் மதத்திற்கே ஆபத்தென் பதை யுணர்ந்தார்கள். ஆகவே ஓர் யுக்தி செய்து "அட பயலே, சாஸ்திரங்களில் கரை கண்டவன் போல் பேசுகிறாயே, பழுக்கக் காய்ச்சின இரும்பு பீடத்தின் மீதிருந்து, சிவபரத்வ நிரூபணம் செய்வா யானால் நாங்கள் ஒப்புக்கொள்கிறோ" மென்றார்கள், ஹரதத்தர் அவ்விதமே செய்ய ஒப்புக்கொண்டு, அக்னீச்வரர் ஆலயத்தில், வேண்டிய ஏற்பாடுகள் நடக்கட்டு மென்றார். அதற்கு வைஷ்ணவர்கள் "அது கூடாது; அரன் கோயிலுக்கு நாங்கள் வர மாட்டோம். உனக்குத் திறமையிருந்தால் வரதராஜர் ஸந்நதியிலேயே சொல்வதற்கென்ன" வென்று ஏசி னார்கள். ஹரதத்தர் அதற்கும் உடன்பட்டார்.

வைஷ்ணவர்களுக்குப் பரம ஸந்தோஷம். குல த்ரோஹியான பையன் ஒழிந்துவிடுவான் என்று மன நிம்மதி யடைந்தார்கள். வரதராஜர் ஸந்நதியில் அகலமாகவும் ஆழமாகவும் குழிவெட்டி பெருந் தீ மூட்டினார்கள். நடுவில் முக்காலி போடப்பட்டு, உருகுந்தருவாயில் பழுக்கப் பழுக்கக் காய்ந்து நின் றது. பலபல ஊர்களிலிருந்தும் வைஷ்ணவர்களும் சைவர்களும் லக்ஷக்கணக்கான பேர் வந்து கூடினார் கள். ஆனால் ஒருவராவது தீக் குழிக்கு 100 அடி தூரத்தில் கூட நெருங்க முடியவில்லை.

குறித்த வேளையில் ஹரதத்தர் பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நாநாதி, விபூதி பூசி, ருத்ராக்ஷம் அணிந்து, சிவ பூஜை செய்து, சிவாலயம் சென்று அக்னீச்வரரையும் கற்பகாம்பிகையையும் வலம் வந்து நமஸ்கரித்துப் பின் வரதராஜர் கோயில் வந்துசேர்ந்தார். சைவ ப்ராமணர்கள் ஸாக்ஷாத் சிவபிரானுடைய தேஜஸ் ஸுடன் விளங்கிய ஹரதத்தரைப் பார்த்ததும் ஹர ஹர கோஷம் செய்தார்கள். ஹரதத்தர் வரதராஜரை மும்முறை வலம் வந்து, நமஸ்கரித்து,

"ஹே, ஸ்வாமின்! நான் தங்கள் ஸந்நதியில் ஸர்வவேத சாஸ்திர முறைப்படி சிவனே பரம் என்று ஸ்தாபிக்கப் போகிறேன்! சிவனே பரம் என்பது உண்மையானால், சிவனுடைய திருவடியில் தாங்கள் கண்ணை யர்ப்பணம் செய்து சிவனைப் பூஜை செய்ததும் உண்மையானால் இந்த அக்னிக்குழி—மலர்கள் பரப்பின குழிபோல் குளுமையாக இருக்கட்டும்! இந்த இரும்புப்பீடம் ஜில்லென்று சந்தனப் பீடம் போலிருக்கட்டும்" என்று பிரார்த்தித்து பழுக்கக் காய்ச்சின இரும்பு பீடத்தின் மீதேறி இனிது அமர்ந்தார். பீடம் செந்தாமரை மலர்போல் மெத்தென்றிருந்தது.

ஹர ஹர நம: பார்வதீ பதயே!
ஹர ஹர மகா தேவ!!

---

வேதங்களிலிருந்தும் சாஸ்திரங்களிலிருந்தும் உபநிஷத்துக்கள், ஆகமங்கள், புராணங்கள் எல்லாவற்றிலிருந்தும் ஆதாரங்களைச் சரமாரியாகப் பொழிந்து சிவனேபரம்! சிவனே பரம்! சிவனே பரம்! என்று மும்முறை ஸத்யம் செய்து தேஜோமயமாய்ப் பிரகாசித்தார். இந்த அற்புதத்தைக் கண்ட ஸகல

ஜனங்களும் வைஷ்ணவர்கள் உள்பட ஹரஹர வென்று கோஷித்தார்கள். ஸ்ரீ ஹரதத்தர் சிவபிரானே யென்று துதித்து, அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். பிதாவும் பையனுடைய பாதத்தில் விழுந்து தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினன். தனக்கும் மற்ற வைஷ்ணவர்களுக்கும் தகுந்த பிராய: சித்தம் சொல்லும்படிக்கும் சிவதீக்ஷை செய்யும்படிக்கும் வேண்டினன்.

சங்கு சக்ரங்களால் சுட்டப்பட்டவர்க்கு விபூதி உத்தூளன திரிபுண்டரமே பிராய:சித்தமென்று சொல்லி, எல்லோரையும் காவேரியில் ஸ்நானம் செய்துவரச் சொல்லி, பிதாவுக்கும் மற்றவர்க்கும் விபூதியிட்டு, ருத்ராக்ஷம் கொடுத்து, பஞ்சாக்ஷர உபதேசம் செய்து சிவதீக்ஷை செய்து ஸ்படிகலிங்கம் கொடுத்து, சிவபூஜாவிதியையும் உபதேசித்தார். அன்று முதல் எல்லா வைஷ்ணவர்களும் சிவபூஜையிலும் சிவபக்தியிலும் ஈடுபட்டுச் சைவரானர்கள்.

---

## அத்யாயம் 5

### ஹரதத்தர் விவாகம்.

ஸ்ரீ ஹரதத்தர் சிவபரத்வம் ஸ்தாபித்த மகிமையும், ஸர்வக்ஞராக விளங்கின மகிமையும் நாடெங்கும் பரவியது. பாண்டிய நாட்டரசன் சிவலிங்கபூபதி யென்பான் கஞ்சனூர் வந்து, ஹரதத்தாசாரிய ஸ்வாமிகளைத் தரிசித்து அவர் பாதங்களில் நமஸ்கரித்து நின்றான். ஸ்வாமிகளும் அருள்கூர்ந்து, அவனுக்குப் பஞ்சாக்ஷரோபதேசம் செய்தார். அரசனும் உள்ளம் பூரித்து, அவருக்குக் கனகாபிஷேகம் செய்து விடை பெற்றுப் போனன்.

ஹரதத்தாசாரியார் பிரம்மசர்யவிரத மனுஷ்டித்து வந்தார். சில வருஷங்கள் சென்றன. அடிக்கடி சிவலிங்கபூபதியும் கஞ்சனூர் வந்து, ஸ்வாமிகளைத் தரிசித்து, அவருக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து, அவர் ஆசீர்வாதம் பெற்றுப்போவான்.

நிற்க, சைவ அக்ரஹாரத்தில், வாதுல கோத்ரத்தில் ஸுப்ரதீகர் என்ற சிவபக்தர் செய்த தவத்தின் பயனாய் ஸாக்ஷாத் மகாலக்ஷ்மியே அவருக்குப் புத்ரியாக அவதரித்து, கமலாக்ஷியென்ற பெயருடன் வளர்ந்து வந்தாள்.

ஒரு ஸமயம் சிவலிங்கபூபதியார் வாஸுதேவருடன் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில், ஆசார்யாருக்கு விவாகத்திற்குரிய பருவம் வந்துவிட்டதென்று சொல்ல, பக்கத்தில் வீற்றிருந்த ஸுப்ரதீகர் தனது பெண்ணை அங்கீகரிக்கும்படி வேண்டினார். வாஸுதேவரும் மற்ற பெரியோர்களும் அவர் வார்த்தையை அங்கீகரித்தார்கள். உடனே ஜோதிடர்களைக் கூப்பிட்டு ஓர் சுப முகூர்த்தம் பார்த்தார்கள். சிவலிங்கபூபதி நேரில் இருந்து வெகு விமரிசையாக ஸ்ரீ ஹரதத்தருக்கும், கமலாக்ஷிக்கும் விவாகத்தை நடத்தி வைத்தான். வந்திருந்த ஜனங்கள் எல்லாருக்கும் பட்டுகளையும், பீதாம்பரங்களையும் வழங்கினான். ஆசார்யாரையும் கமலாக்ஷியையும் முத்துச்சிவிகையிலேற்றி ஊர்வலம் செய்துவைத்தான். கோவிலில் அக்னீச்வர மகாலிங்கத்துக்கும் கற்பகாம்பிகைக்கும் விசேஷமான அபிஷேகாதி ஷோடசோபசாரங்கள் விமரிசையாகச் செய்தான். வேதவிதிப்படி விவாஹம் விமரிசையாக நடந்தேறியது.

# அத்யாயம் 6

## ஸ்ரீ ஹரதத்தர் வாழ்க்கை அற்புதங்கள்.

ஸ்ரீ ஹரதத்தரும் கமலாக்ஷியும் இல்லற தர்மத்தை வெகு ஒழுங்காகவும் சிவபக்தியில் ஈடுபட்டவர்களாகவும் நடத்தி வந்தார்கள். ஸ்ரீ ஹரதத்தர் பிரதிதினம் காலையில் காவேரியில் ஸ்நானம் செய்து ஸந்தியோபாஸனம் செய்து, காயத்ரீ ஜபம், ஹோமம், சிவபூஜை முதலியன செய்து, அக்னீச்வரரை வணங்கி, பின்னர்த் திருக்கோடிகா, திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆடுதுறை, திருமங்கலக்குடி திருமாந்துறை, என்ற ஆறு ஸ்தலங்களையும் தரிசித்து வணங்கி, பிறகு மத்யான்னிக ஸ்நானம் செய்து, சிவபூஜை முடித்து, அதிதி யாராதனை செய்து, பின்னர் ஸாயங்காலம் அனுஷ்டானங்களைச் செய்து, சிவதர்சனம் செய்து வந்தார். அவருடைய பத்னியரர் கணவருக்கு வேண்டிய சிச்ருஷைகளையும் சிவ பூஜைக்கு வேண்டிய ஸாதனங்களையும் பக்தியுடன் செய்து வந்தாள். ஓழிந்த நேரங்களில் ஹரதத்தர் சிவ கதைகளைச் சொல்லியும் சிவமகிமைகளை கிரந்தங்களாக எழுதியும் காலக்ஷேபம் செய்துவந்தார். உலகத்தார் உண்மையறிந்து உய்யும் பொருட்டு சிவபரத்வத்தைப் பற்றிய ச்லோகங்கள் பல பல எழுதினார். மிகவும் கீர்த்திவாய்ந்து தினப்படிப் பாராயணத்துக்கு யோக்யதையான "பஞ்சரத்னம்", தச ச்லோகங்களைக் கவனம் செய்தார். "ஹரிஹர தாரதம்யம்" என்று 100 ச்லோகங்கள் கொண்ட ஓர் கிரந்தம் எழுதினார். கடவுளுக்கு ஸாதாரண மலர்களால் போடப்படும் மாலை மறுநாள் வாடிவிடுகிறதேயென்று மனம் வாடி, வாடாமாலையாக ஒரு மாலை சூட்டினார். அதுதான் "சுருதி ஸூக்திமாலை" யென்ற கிரந்தம். 'சதுர் வேதஸாரஸங்கிரஹம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR, MADRAS


என்றும் பெயர்கொண்டது. நான்கு வேதங்களி லும் ஸாரமான சுருதிகளால் சிவபரத்வத்தை ஸ்தா பிக்கும் நூல்.

அவருடைய வாழ்க்கையில், சிவபக்தி மகிமை யால் அவர் செய்த அற்புதங்கள் பல பல. சிலவற் றைச் சுருக்கமாகக் கீழே குறிப்பாம்.

ஒரு ஸமயம் ஸ்வாமிகள் மாத்யான்னிக ஸ்நானம் செய்து சிவலிங்க பூஜை செய்கையில் ஒரு நாய் தாக மேலிட்டு அபிஷேக ஜலத்தை ஏந்திச்சாப்பிடுமாறு நாக்கை நீட்டிற்று. அப்பொழுது ஆசார்யார் அந்தச் சங்காபிஷேக ஜலத்தை நாயின் நாவிலே விட்டு, மிஞ் சிய ஜலத்தை சிவலிங்கத்திற் கபிஷேகம் செய்தார். பூஜையை தர்சனம் செய்துகொண்டு ஸமீபத்திலிருந் தவர்கள் ஆசார்யருடைய மனோபாவம் தெரியாமல் தயங்கி நிற்க, ஆசார்யார் தன்பேரில் உள்ள அன்பி னால் சிவபெருமானே நாய் ரூபத்தில் தன்னைக் கடா க்ஷிக்க வந்தார் என்று தெரிவித்தார். அவருக்குச் சிவபெருமானிடத்திலிருந்த அன்பின் திடத்தையும், ஸகல ஜீவராசிகளிடத்தும் அவர் வைத்திருந்த சிவ தத்வத்தையும ஜனங்கள் அறிந்து அதிசயித்தார்கள்.

2. பின்னொருநாள் சிவலிங்க பூபதியானவர் ஓர் உயர்ந்த பட்டு பீதாம்பரத்தை ஸ்ரீ அக்னீச்வரருக் குச் சாத்தும்படியாக ஓர் பிராம்மணர்மூலம் கொடுத் தனுப்பினார். பிராம்மணர் வந்த ஸமயம் ஆசார்யார் அக்னி ஹோமம் செய்யும் ஸமயமாக விருந்தது. ஹோமாக்னியே அக்னீச்வர ஸ்வரூபம் என்ற திட புத்தியுடன் அக்னீச்வரப்ரீத்யர்த்தமாக, அந்தப் பீதாம் பரத்தை அக்னியிலேயே ஆகுதி செய்துவிட்டார். பீதாம்பரம் க்ஷணப்பொழுதில் எரிந்து சாம்பலா யிற்று. வந்த பிராம்மணர் ஆச்சர்யப்பட்டாலும் ஆசார்யார்முன் வாய் திறக்கவில்லை. விடை பெற்றுக்

கொண்டு, அரசனிடம் நடந்த விஷயத்தைத தெரி வித்தார். அரசனும் உண்மையறியத் திறனில்லாது மயங்கினுன். ஸாயங்காலம் ஸ்வாமிகளைத் தரிசனம் செய்தபோது, மிகவும் பயபக்தியுடன், காலையில் அனுப்பிய பீதாம்பரம் ஸந்நிதானத்தில் சேர்ந்ததோ வெனக் கேட்டான். ஸ்வாமிகளும் அது நல்ல ஸம யத்தில் சேர்ந்ததென்றும் அக்னீச்வரருக்கு அர்ப்பண மானதென்றும் சொன்னுர். அப்பொழுதும் அவனுக்கு மனம் தெளியவில்லை. ஆனுல் ஆசார்யாருடைய மகி மையை யறிந்தவனுதலால், அவரை மேற்கொண்டு ஒன்றும் கேட்கவுமில்லை. ஸ்வாமிகளுடன் கோயி லுக்குப் போய் ஈச்வர தர்சனம் செய்கையில், தான் அனுப்பிய பீதாம்பரம் அக்னீச்வர மகாலிங்கத்தின் மேல் சாத்தப்பட்டிருந்த அற்புதம் கண்டு மனம் தெளிந்தான்.

3. ஒரு நாளிரவில் ஒரு பிராம்மணர் மாட்டுக் கொட்டிலில் இளம் பசுங்கன்று கட்டியிருந்ததைப் பார்க்காமல் அதன்மீது வைககோல் பொதியைப் போடவே, சிறிது நேரத்தில் அது மரித்துவிட்டது. பொழுதுவிடிந்து விஷயம் தெரிந்த பிராம்மணர் மிக வும் துக்கித்துத் தான் அறியாமற்செய்த கோவத்ஸ ஹத்திக்குப் பிராயச்சித்தம் சொல்லும்படிப் பல பிராம்மணர்களைக் கேட்டார். அவர்கள் ஒரு முகமாய் கோஹத்திக்குப் பிராயச்சித்தமே கிடையாதென்று சொல்லி அவனை ஜாதிப்ரஷ்டம் செய்துவிட்டார்கள். பிராம்மணர் ஹரதத்தாசார்யாரே கதியென்று அவர் வீட்டுக்குள் நுழையும்போது வாயிற்படி தலையில் இடிக்க "சிவ சிவ" வென்று சொல்லிக்கொண்டே நுழைந்தார். அந்த வார்த்தைகள் உள்ளேயிருந்த ஆசார்யார் காதுகளில் விழ, அவர் யாரோ பெரிய சிவபக்தர் வருகிருரென்று பரபரப்புடன் ஓடி வந்து பிராம்மணரை நமஸ்கரித்து உபசாரம் செய்தார். பிராம்மணர் தான் உபசாரத்திற்கு அருகனல்ல

வென்று தன் விருத்தாந்தத்தைத் தெரிவித்தார். ஸ்வாமிகள் அவரைத் தேற்றி "பயப்படாதீர்! ஓர் முறை 'சிவ' என்ற மாத்ரத்தில் உம்முடைய பாபம் நீங்கிற்று. மறுமுறை சொன்னதால் மோக்ஷமும் அடைவீர்" என்றார். பிராம்மணர் அவரை வணங்கி, உற்சாகத்துடனும் தெளிந்த மனதுடனும் விடைபெற்றுக் கொண்டார். ஊர்* பிராம்மணர்களுக்கு ஸந்தேகம் தீரவில்லை. ஆகவே ஸாயங்காலம் ஆசார்ய ஸ்வாமிகள் கோவிலில் தர்சனம் செய்கையில் தங்கள் ஸந்தேகத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். "'சிவ' என்று சொன்ன மாத்ரத்தில் கோஹத்தி பாபமும் அகலும் என்று அருளிய தங்கள் வாக்கை நாங்கள் நம்புகிறோம்; ஆயினும், எங்களுடைய அஞ்ஞான மனது தெளிவடையும் வண்ணம அதற்கு அத்தாக்ஷியாக ஏதாகிலும் ஓர் பிரத்யக்ஷ ப்ரமாணம் செய்து காட்டவேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள். ஒருவர், "இதோ மகாலிங்கத்திற் கெதிரில் இருக்கும் இக் கல் நந்தி, இந்த அருகம்புல்லைத் தின்னும்படிச் செய்தால் எங்கள் மனம் தெளிவடையும்" என்றார். ஸ்வாமிகள் அந்தப் புல்லை வாங்கி நந்தியிடம் காட்ட, அது தன் முகத்தைத் திருப்பி நாவை நீட்டிப் புல்லை வாங்கி மென்று தின்றது. எல்லாரும் சிவநாம மகிமையை யுணர்ந்து மனமகிழ்ந்து ஆசார்யாரையும் புகழ்ந்தார்கள்.

4. ஒரு ஸமயம் வாசலில் நெல் உலர்த்தி இருந்தது. அதை ஒரு காளை தின்ன வந்தது. ஆசார்யார் ஸமீபத்தில் போய், நெல்லைக் கூட்டிக் கூட்டிக் காளைக்குக் கொடுத்து உண்பித்தார். அவர் தாயார் இதைப் பார்த்து விட்டு அஞ்ஞானத்தினல், அந்தக் காளையை அடித்து விரட்டினாள். ஹரதத்தர் "அம்மா, என்ன காரியம் செய்தாய்! வாயில்லா ஜீவனாயிற்றே!" என்று துக்கித்தார். தாயார் "ஸாயங்கிரம் சிவ பூஜா நிவேதனத்துக்கு அரிசியில்லை, இந்த நெல்லைத்

தான் குத்தி உபயோகிக்கவிருந்தது" என்று பதில் சொன்னாள். இது நடந்த ஏழெட்டு நாழிகைக்குப் பின் சிவலிங்கபூபதியிடமிருந்து 200 அரிசி மூட்டைகள் வந்திறங்கின. தாயாரும் வந்து பார்த்து ஆனந்தமடைந்தாள். அரிசையைக் கொணர்ந்த ஸேவகர்கள் அரசர் 400 மூட்டைகள் அனுப்பியதாகவும், வழியில் 200 மூட்டைகள் நதி ப்ரவாகத்தில் போய் விட்டதென்றும் சொல்லி வருந்தினார்கள். ஆசார்யார் அவ்விதம் போனது கடவுள் செயலெனத் தேற்றி, தாயாரைப் பார்த்து "நெல்லைத் தின்ற காளையைப் பாதி தினனும்போதே அடித்து விரட்டினதன் பலனாக, பாதி அரிசி மூட்டைகள் நமக்குக கிடைக்கவில்லை யென்று விளக்கிக் காட்டினார்.

5. மறுநாள் ஆசார்யார் மனைவி முற்றத்தில் அரிசி களைந்துகொண்டிருக்கையில ஏதோ அவசர வேலையாக உள்ளே போக நேர்ந்தது. அது ஸமயம் ஒரு நாய் வந்து அந்த அரிசையைத் தின்ன, மனைவியார் ஒரு அரிவாளை அந்த நாய்மீது விட்டெறிந்தாள் அதுவும் விதிவசத்தால இறந்துவிட்டது. இது விஷயம் ஆசார்யாருக்குத் தெரிந்தபோது, நாய ஸ்பர்சிக்கும்படி வைத்திருந்தது மனைவியின குறறமேயென்று சொல்லி, மனம வருந்தி, இறந்த நாயைத தன் மடியில் போட்டுக்கொண்டு அதற்கு விபூதி பூசி, ருத்ராக்ஷமணிந்து அதன் காதில் பஞ்சாக்ஷர உபதேசமும் செய்தார். உடனே ஆகாயத்திலிருந்து ஓர் விமானம் வர, நாய் தனது பூத சரீரத்தை விட்டு, தேவசரீரத்தை யெடுத்துக்கொண்டு, கைலாஸம் சென்றது. ஹரதத்தர் மனம் ஒருவாறு திருப்தியடைந்தது.

6. ஆயினும் தன் தாயார் காளையை யடித்த பாபத்திற்கும், மனைவி நாயைக் கொன்ற பாபத்திற்கும் பிராய: சித்தம் யோஜித்து ஒரு ஓலையில் 'தெரிந்தும் தெரியாமலும் செய்த பாபங்கள் மகத்தா

பாபங்களாக விருந்தாலும்' என்ற கருத்துடைய—(ச்லோகத்தின்) முதல் வரியை எழுதினார்.

ज्ञानाज्ञानप्रयुक्तानाम् पापानां महतामपि ।

ஞானக்ஞான ப்ரயுக்தானும் பாபனும் மகதாமபி.

இரண்டாவது வரி சீக்ரம் கூடிக்கவில்லை. ஓலையைக் கூரையிற் சொருகிவிட்டுக் காவேரிக்குச் சென்றார். அப்பொழுது பகவானே, ஹரதத்தர் ரூபத்தில் வீட்டுக்கு வந்து, சொருகியிருந்த ஓலையை எடுத்து ச்லோகத்தைப் பூர்த்தி செய்துவிட்டுப் போனார். ஆசார்யார் ஸ்நானம் அனுஷ்டானுதிகளை முடித்துக் கொண்டு. வீட்டுக்கு வந்து சிவ பூஜையும் செய்து, போஜனத்துக்குப் பின் ச்லோகத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஓலைச் சுருளை யெடுத்தார். அதில்

एकान्तनिष्कृतिः शंभोः सकिर्देव हि कीर्तनात् ॥

ஏகாந்த நிஷ்க்ருதி: சம்போஸ் ஸகிர்தேவஹி கீர்தனுத்

என்று 2-வது வரி எழுதப்பட்டு, ச்லோகம் பூர்த்தியாகியிருந்தது (அதாவது ஏகாந்தத்திலிருந்து சிவ நாமாவை உச்சரித்தலே பிராயச்சித்தமாம் என்று அர்த்தம்.)

ஹரதத்தர் பரம ஆச்சர்யமடைந்து மனைவியை அழைத்து விசாரிக்க, அவள் "ஸ்நானத்திற்குப் போன நீங்கள்தான் திரும்பி வந்து, ச்லோகம் எழுதி வைத்து மறுபடி ஸ்நானத்திற்குப் போனீர்களே" என்றாள், ஸ்வாமிகள் ஆஹா! ஸாக்ஷாத் பரமேச்வரனே இவ்வாறு அருள் புரிந்தாரென ஆனந்தக் கூத்தாடினார். அதே ப்ரகாரம் தன் தாயாருக்கும் மனைவிக்கும் பிராயச் சித்தம் செய்துவைத்தார்.

7. சோழமகாராஜன் இவருடைய மகிமைகளைக் கேட்டு இவரை அண்டி நமஸ்கரித்து பாத காணிக்கைகள் ஸமர்ப்பித்து "அடியேன் இந்த சரீ

ரத்துடன் கைலாஸம் போக விரும்புகிறேன்; அருள் புரிய வேண்டு"மென்று வணங்கினன். ஆசார்யாரும் கிருபை கூர்ந்து, கஞ்சனூர் முதலாக ஏழு சிவ ஸ்தலங்களையும் அரையாமத்தில் தரிசித்து வந்தால் அவன் எண்ணம் ஈடேறுமென்று சொன்னார். அரசனும் ஸந்தோஷித்து, அவர் ஆசீர்வாதம் பெற்று, பஞ்சகல்யாண குதிரைமீதேறி குடைபிடித்தவன் ஸமீபத்தில் ஓடிவர, ஆறு ஸ்தலங்களையும் அரையாமத்தில் தரிசித்து மறுபடி அக்னீச்வரர் ஆலயம் வந்து, குதிரையையும் குடைபிடித்தவனையும் வெளியே நிறுத்தி, கோயிலுக்குள்ளே போய் ஸ்வாமிகளை வணங்கினன். வாயு வேகமாக ஓடிவந்த குதிரையும் குடைபிடித்தவனும் களைத்து மூர்ச்சித்தார்கள். அந்த க்ஷணமே கைலாஸத்திலிருந்து விமானம் வர குதிரையும் குடைபிடிக்தவனும் அதிலேறிக் கைலாஸம் போனார்கள். அந்த அதிசயத்தைக் கண்ட சோழராஜன் தானும் சுற்றி வந்தும் தனக்குமட்டும் அந்த பாக்யம் கிடைக்கவில்லையே என்று வருந்தி நிற்கையில் ஹ ர த த் த ர் "ராஜன், குதிரையும் குடைபிடிப்போனும் பாதசாரிகளாகச் சுற்றிவந்தபடியால், பாக்யம் பெற்றார்கள். குதிரைமேல் ஸுகமாக ஸவாரி செய்த உமக்கு அதே பாக்யம் எப்படிக் கிட்டும்?" என்றார். ராஜனுந்தன் தவறையுணர்ந்து மறுபடியும் பக்தியுடன் ஏழு ஸ்தலங்களையும் பாதசாரியாகச் சுற்றிவர, அவனுக்கும் விமானம் வந்தது. ஹரதத்தரை நமஸ்கரித்து அவர் ஆசீர்வாதம் பெற்று விமானம் ஏறிக் கைலாஸம் சென்றான்.

8. கிருஹஸ்தாச்ரம தர்மத்தை விதிப்படி நடத்தி வந்த ஹரதத்தாசார்யார் ஸ்வாமிகளுக்கு ஏழு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தார்கள். அவர்கள் எல்லாருக்கும் ஈச்வரன், ஈச்வரி நாமாக்களையே வைத்தார். மகாதேவன், நீலகண்டன், சங்கரன், சந்திரசேகரன், சம்பு, மத்யார்த்துனேச்வரன்,

கோவடுநாயகர், என்று பிள்ளைகளுக்கும், கற்பகாம்பிகை, மீனாக்ஷி யென்று பெண்களுக்கும் பெயரிட்டார்.

ஓர் ஸமயம், அக்னீச்வரர் ஆலயத்தில் ரதோற்சவம் நடைபெற்றது. எல்லாப் பெண்களும் குழந்தைகளும் நானாவித பட்டாடைகள் உடுத்தி, விலை உயர்ந்த ஆபரணங்களும் போட்டுக்கொண்டு உற்சவத்தில் ஈடுபட்டார்கள். ஆசார்யாரின் குழந்தைகளுக்கும் நல்ல பாவாடைகளும் நகைகளும் வேண்டுமென்று ஆசை. ஆசார்யார் தனக்கென்றோ, தன் குடும்பத்திற்கென்றோ யாதொரு திரவியமும் சேர்த்து வைத்துக் கொள்ளாதவர். ஆகவே குழந்தைகளைப் பார்த்துப் பின்வருமாறு ஸமாதானம் சொன்னார்.

"நீங்கள் பூசும் விபூதியும் குங்குமமுமே சரீரத்துக்கு ஆபரணம். சிவநாம ஸ்தோத்ரங்களையும், சிவன் பெருமைகளையும் கேட்பதுவே காதுகளுக்கு அலங்காரம். சிவாலய ப்ரதக்ஷணம் செய்வதே பாதபூஷணம்." என்றார். குழந்தைகள் "தந்தையே! தாங்கள் சொன்ன ஆபரணங்கள் எல்லாம் இருக்கின்றன, உண்மைதான். ஆயினும் மற்ற தோழிகளைப் போல் லௌகிக ஆபரணங்களும் ஒரு முறையாவது அணிந்துகொள்ள விரும்புகிறோம்; தாங்கள் பகவானை ஸ்மரித்தால் இவைகளை யடைவது அரிதா?" வென்றார்கள். குழந்தைகள் ஈச்வர பக்தியில் வைத்த அபிப்ராயம் ஸித்தியாக வேண்டுமென்ற விருப்பத்துடன் பகவானை த்யானித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு காளை அவ்வழியே போக, ஆசார்யார் குழந்தைகளைப் பார்த்து "அந்தக் காளையின் குளம்புகள் பதிந்த இடங்களில் தேவையான ஆபரணங்கள் கிடைக்கும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். அதே பிரகாரம் விலைமதிக்கொணாத நவரத்னாபரணங்கள் அனேகமாய் கிடைக்க, குழந்தைகளும் தாயாரும் அவைகளை யணிந்துகொண்டு மகிழ்வெய்தினார்கள்.

9. ஓர் இரவு திருவாவடுதுறையில் ஸ்ரீ கோவடு நாயகரைத் தரிசித்து வீட்டுக்குத் திரும்புகையில், இடியும் மழையுமாக விருந்தபடியால் வழி தெரியாது சிரமப்பட்ட போது, கோவடுநாயகரே ஓர் இடையன் போல் வந்து அவருக்கு வழிகாட்டி, வீடு சேர்த்தார். ஆசார்யார் இடையனைச் சாப்பிட்டுப் போகும்படி உபசரிக்க, அவன் 'கையில் கொடுத்துவிடுங்கள், வீடு போய் மனைவி மக்களுடன் சாப்பிடுகிறேன்' என்று சொல்ல, ஹரதத்தர் பாகற்காய்க் குழம்பும் அன்னமும் நல்ல புத்துருக்கு நெய் விட்டுக் கலந்து கொடுத்தனுப்பினார்.

மறுநாட் காலையில் கோயில் ஸந்நதியில், பாகற்காய்க் குழம்பும், சாதமும் சிதறியிருந்ததைப் பார்த்த அர்ச்சகர்கள் பரிசாரகர்களைக் கண்டிக்க, கடவுளே அசரீரி வாக்கால், தான் முதல் நாள் இரவு ஹரதத்தாசாரியாருக்குத் துணைசென்ற திருவிளையாடலைத் தெரிவித்தார். அது கேட்ட ஜனங்கள் எல்லாரும் சிவானுக்ரஹம் பரிபூர்ணமாகப் பெற்ற ஹரதத்தாச்சாரியாரைப் பலவாறு புகழ்ந்தார்கள். ஈச்வரனின் இந்தத் திருவிளையாடலைக் கேட்டறிந்த ஹரதத்தரும், மெய்சிலிர்த்து கடவுள் கருணையைப் போற்றினார்.

10. ஸ்ரீ ஹரதத்தாசாரியாருடைய சகோதரிக்கு ஓர் புதல்வர் முடவராக விருந்தார். (அவரை நாம் கங்காதரன் என்ற பெயரால் அழைப்போம்) அவர் காசி போய் கங்கா ஸ்நானம் செய்ய விரும்பி ஹரதத்தாசாரியாரைப் பிரார்த்தித்தார். அவர் அந்த ஊர் பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவரும்படிச் சொன்னார். பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த அவர் காசியில் மணிகர்ணிகா கட்டத்தில் எழுந்தார். காசி விச்வேச்வரரையும் விசாலாக்ஷியம்மையையும் தரிசித்துக்கொண்டு சில காலம் வாழ்ந்தார். ஒரு நாள் விச்வேச்வரர் ஆலயத்திற்கு ஸமீபத்தில் விபூதியிட்ட ஓர் மகா புருஷர் தன் பத்னியுடன்

சொக்கட்டாடிக் கொண்டிருந்தார். அவர் கங்கா தரரைப் பார்த்து "உங்கள் கிராமத்தில் காச்யப கோத்ரோத்பவரான ஹரதத்தர் என்ற சிவபக்தரும் குடும்பமும் க்ஷேமமாக விருக்கிறார்களா"வென்று விசாரித்தார். கங்காதரர், ஹரதத்தர் தனது மாதுலர் தானென்றும், எல்லாரும் ஸௌக்யமென்றும் சொன்னார். மகா புருஷர். "அவர் க்ஷேமத்தைக் காசியில் ஒருவர் விசாரித்தார் என்று சொல்லும்" என்றார். பக்கத்திலிருந்த பெருமாட்டியும், புன்சிரிப்புடன் "நானும் விசாரித்தேன் என்று சொல்லும்" என்றார். கங்காதரர் அவ்விருவர்களையும் நமஸ்கரித்து "நான ஹரதத்தர் அருளால், பிரம்ம தீர்த்தத்தில், ஸ்நானம் செய்து இங்கு எழுந்தேன்; இப்பொழுது ஊருக்குத் திரும்பிப்போக வகையறியாது இங்கே தாமதிக்கிறேன" என்றார். மகா புருஷர். "ஏன் தயங்கவேண்டும், எப்படி யிங்கு வந்தீரோ, அப்படியே திரும்பியும் போகலாமே! ஹரதத்தரை நினைத்து மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்யுங்கள்" என்றார். கங்காதரர் அப்படியே மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்து, கஞ்சனூர் பிரம்ம தீர்த்தத்தில் எழுந்து ஹரதத்தாசாரியாரை நமஸ்கரித்து அவர் கிருபையால் கங்கா ஸ்நானப் பேறு கிடைத்த மகிமையைச் சொன்னார். ஸ்வாமிகள் "அங்கே யாராவது தன்னை யறிந்த மனிதர் இருந்தனரோவென்று கேட்க, விச்வேச்வர ஆலயத்திற்கு ஸமீபத்தில் ஓர் மகா தம்பதிகள் விசாரித்ததாகவும், அவர் சொற்படிதான், மணிகர்ணிகையில் மூழ்கி கஞ்சனூரில் எழுந்ததாகவும் சொன்னார். ஆசார்யார், காசி விச்வநாதரும், விசாலாக்ஷியம்மையும்தான் தன் க்ஷேமத்தைப் பற்றி விசாரித்திருக்க வேணடுமென்ற உண்மையை யறிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். பின்னர் கங்காதரரே ஹரதத்தாசார்யாருக்குப் பிரதம சிஷ்யராக விருந்து அவரெழுதிய சில கிரந்தங்களுக்கு வியாக்யானமும் எழுதினார். கஞ்சனூரில் அவர் மூழ்கி

யெழுந்த தீர்த்தத்திற்கு மணிகர்ணிகை தீர்த்தம் என்று பெயர் வழங்கலாயிற்று.

11. அந்தக் கஞ்சனூரில், சிவப்ரியரென்று ஓர் பிராம்மணோத்தமர் இருந்தார். அவருக்குத் தரும பாலன், ஸுமதியென்று 2 பாலர்கள் இருந்தார்கள் ஒருநாள் காலை சிவப்ரியர் காவேரிக்கு ஸ்நானத்திற்குப் போய் காலை யனுஷ்டானங்களை முடித்து வீட்டுக்குத் திரும்பி வருவதற்குள், ஒரு புதல்வன் கூடத்தில் வாந்திபேதியால் இறந்து கிடந்தான். மற்றவன் தோட்டத்தில் பாமபு கடியால இறந்து கிடந்தான். சிவப்ரியர் ஏக காலத்தில் இரண்டு புத்ரர்களும் இறந்து கிடந்ததைப் பார்த்து புத்ரசோகம மீறிக் கதறினர். அந்த சரீரங்களைக் கட்டிக்கொண்டு புரண்டழுதார். கிராமத்தார் எவ்வளவு தேற்றியும அவர் துக்கம் சாந்தியடையவில்லை. மேல நடக்கவேண்டிய கிரியை களைச் செய்ய மனமில்லாது தவித்ததைக் கண்டு, கிராமத்தார் ஸ்ரீ ஹரதத்தரிடம் விஷயத்தைத் தெரி வித்தார்கள. அவர் சிவப்ரியரின் புத்ர சோகத்தைக் கேட்டு வருந்தி, அவர் கிருஹம் சேர்ந்து, பஞ்சாக்ஷர மந்திரம் ஜபித்து, மந்திர விபூதியைக் குழந்தைகளின் சரீரத்தினமேல தடவி காவேரி ஜலத்தையும் புரோ க்ஷணம் செய்ய குழந்தைகள் உயிருடன் எழுந்து ஹரதத்தரையும் ஏனையோரையும் வணங்கி, முன் பிறப்பில் தாங்கள் சிவப்ரியருக்கு அடிமைகளாக விருந்தாகவும், நியாயமான கூலி தங்களுக்குச் சேராத படியால் அவருககே புத்ரர்களாகப் பிறந்து, அவர் அன்னம் சாப்பிட்டதாகவும், அன்றுடன் கடன் தீர்ந்ததாகவும், ஹரதத்தர் விபூதி மகிமையால், உயிர் பெற்றுப் பூர்வ ஜன்ம ஞானமும் ஏற்பட்டதாகவும் விவரங்களைச் சொன்னார்கள். அதே ஸமயம் சிவ கணங்கள் விமானத்தில் வந்திறங்கி, ஹரதத்தர் இட்ட விபூதி மகிமையால் குழந்தைகளுக்குச் சிவ லோகப்ராப்தி கிடைத்ததென்று சொல்ல, குழந்தை

களும் பூத உடலங்களை விட்டு, தேவ உருவெடுத்து, ஹரதத்தரை நமஸ்கரித்து விமானத்தில் ஏறிச் சென்றார்கள். கூடியிருந்த ஜனங்கள் எல்லாரும் ஹரதத்தரின் சிவபக்தியையும் விபூதி மகிமையையும் போற்றினார்கள்.

---

## அத்யாயம்

## ஸ்ரீ ஹரதத்தர் மோக்ஷ ஸாம்ராஜ்யம்.

இவ்விதமாக சிவபக்தி மகிமையாலும், சிவநாம மகிமையாலும், விபூதி மகிமையாலும், அனேக மற்புதங்கள் செய்து வாழ்ந்துவரும் நாளில், ஹரதத்தருக்கு வயது ஆகித் தள்ளாமை வந்து, பிரதிதினமும் ஏழு ஸ்தலங்களுக்குச் சென்று தரிசித்துவரச் சக்தியிலராய் தமது ஆன்மார்த்த பூஜையிலேயே, ஏழு ஸ்தலத்து லிங்கங்களையும ஸதாபித்துப் பூஜை செய்து வருவாராயினார். ஸ்ரீ அக்னீச்வரரையும் கற்பகாம்பிகையையும் தன்னை யாட்கொள்ளும்படிப் பிரதிதினமும் பிரார்த்தித்துவந்தார். ஒரு நாள் தை மாதம் சுக்ல பஞ்சமி தினம் காலையில் சிவபெருமான் அவருக்கு ஸாயுஜ்ய பதவி கொடுக்கத் திருவுளங் கொண்டு பார்வதி தேவியாரோடும் ஸகல தேவர்களோடும், ரிஷிகளோடும், பிரதமகணங்களோடும் காக்ஷி யளித்தார். ஹரதத்தர் சிவபிரானை வணங்கி மெய்ம்மறந்து ஆனந்தக் கூத்தாடினார்.

"ஹே மகாப்ரபோ! அடியேனை யாட்கொள்ள வேண்டும். இந்த அக்ரஹாரத்திலுள்ள பதினொன்கு வீட்டார்களையும், அடியேனையும் மீண்டும் ஜன்மம எடுக்காத முக்தி நெறியிலே சேர்த்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பகவான் 'அவ்விதமே யாகுக' என்று திருவாய் மலர்ந்தருள, கோடி ஸூர்ய ப்ரகாசம் கொண்டதும், நவரத்னங்கள் இழைக்கப் பெற்றதுமான ஓர் விமானம் வந்திறங்கியது அதில்

பதின்மூன்று வீட்டுக்காரர்களும் தங்கள் தங்கள் பந்துக்கள் ஸ்நேகிதர்கள் பசுக்கள் உள்பட எல்லாரும் ஏறினர்கள். பதினன்காவது வீட்டில் இருந்த ஓர் வயது முதிர்ந்த கிழவி மாத்திரம் வரவில்லை. ஹரதத்தர் அவளுக்கு ஆளனுப்பினர். அவள் ஒவ்வோர் நாளும் விநாயகருக்கு மோதகம் நிவேதனம் செய்வது வழக்கம். ஆகவே "இப்பொழுதுதான் மோதகம் அடுப்பில் வைத்திருக்கிறேன். அது நன்றாக வெந்து, விநாயகருக்கு நிவேதனம் செய்த பிறகுதான் நான் வரக்கூடும். கைலைக்கு முந்தி போகிறவர்கள் போகலா"மென்று சொன்னுள்.

ஹரதத்தர் அவள் அப்ப்ராயத்தைப் பகவானுக்குத் தெரிவிக்க, பகவானும் புன்சிரிப்புடன், பக்கத்திலிருந்த விநாயகரைப் பார்த்தார். விநாயகரும தந்தையின் திருவுள்ளத்தைத் தெரிந்துகொண்டு அக்னீச்வரர் ஆலயத்தின் புறத்திலே கோவில் கொண்டார்.

பிறகு எல்லாரும் விமானமேறிய பின்; ஹரதத்தரும் ஏறும்போது அவர் வீட்டில் தினம் எச்சில் இலை தின்றுவந்த நாயொன்று இரக்கந்திறல் அழ, அதையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டார். விமானம் கைலை நோக்கிக் கிளம்பியது.

கிழவி மோதகம் பக்குவமானபின் எடுத்து, அதிகமான பக்தியோடும் நிதானத்தோடும் விநாயகருக்குப் பூஜை செய்து நிவேதனம் செய்தாள. விநாயகர் அவளுடைய பக்தியை நிலை நாட்டும் நோக்கம் கொண்டு வேண்டிய வரம் கேட்குமாறு சொன்னுர். கிழவியும் லோகோபகாரமாக "ஸ்வாமீ, என் போன்ற ஓர் கிழவி தங்களைத் தினம் பூஜித்து வந்த விஷயம் உலகத்தில் நிலைத்து நிற்குமாறு இந்த விடத்தில் ஸாந்நித்யமாக விருந்து உங்களைப் பக்தியுடன் பூஜித்து, மோதகம் நிவேதனம் செய்யும் ஸகல ஜனங்களுக்கும் கைலாஸப் பதவி யருளவேண்டுமென்று பிரார்த்தித்

தாள். விநாயகரும் அவ்வாறே செய்வதாக அருளித் தனது துதிக்கையால் அவளை யணைத்துக் கைலையில் சேர்ப்பித்து, அவள் விருப்பத்தின்படி, கஞ்சனூரி லும், ஸ்ரீ அக்னீச்வரர் ஆலயத்திற்குப் புறத்திலே நிரந்தரமாகக் கோயில் கொண்டார். அவர் கோயில் கொண்ட இடமே இப்பொழுது கற்பக விநாயகர் கோயில். இன்றைக்கும் கஞ்சனூரில், எல்லா ஜனங் களும் ஹரதத்தர் முக்தியடைந்த தினமான தைமீ சுக்ல பஞ்சமி யன்று மோதகங்கள் செய்து விநாயக ருக்கு நிவேதனம் செய்து நற்கதி யடைகிறார்கள்.

நிற்க, கிழவி கைலையில் சேர்ந்து கொஞ்ச நேரத் திற்குப் பிறகுதான் ஹரதத்தரும் மற்றவரும் ஏறிச் சென்ற விமானம் கைலாஸத்தை யடைந்தது. ஹரதத்தாதியர் தங்களுக்கு முன் கைலை சேர்ந்த கிழவியின் மகிமையை யறிந்து உள்ளம் பூரித்தார்கள்.

இவ்விதமாக ஸ்ரீ ஹரதத்த சிவாசார்யாரும், அவர் வசித்த கஞ்சனூர் வாஸிகளும் இக் கலியுகத்தில் உயிருடன் கைலாஸம் சேர்ந்து சிரஞ்சீவிகளாக இன்றும் சிவஸந்நிதானத்தில் விளங்கி வருகிறார்கள்.

அன்பே சிவம் ! அரனருள் பெறுக !

சுபம். மங்களம். சுபம்.

இந்தச் சரித்திரத்தைப் படிப்போரும் பாரா யணம் பண்ணுவோரும், சிவபக்தியிற் சிறந்து விளங்கி சிவஸாயுஜ்ய பதவி யடைவார்கள் என்ற பல சுருதி யுடன், இந்தச் சரித்திரம் (சுருக்கம்) முற்றும்.

சுபம். சிவமயம். சுபம்.

ஹரஹர நம: பார்வதீ பதயே !

ஹரஹர மகா தேவ ! !

ஸ்ரீ ஹரதத்தாசார்யார் பழுக்கக்காய்ச்சிய இரும்பு
பீடத்தின் மீதமர்ந்து, சிவனே பரமென்று
மும்முறை ஸத்யம் செய்த
சிவ பரத்வ ச்லோகங்கள்

महादेवो देवः श्रुतिशिखरमौलिस्थवचनै
स्तथाऽन्ये विष्ण्वाद्या विधिहरिहरेन्द्रानलयमाः ।
महादेवाज्जाताः श्रुणुत वत्सोमेन जनिता
अतो वेदैर्वेद्यो भवति शिव एकः शिवकरः ॥

मखानामेवायं प्रभुरखिलावेश्वाधिकहरो
महर्षिर्वेदादौ स्वरजनिततारः परशिवः ।
यतो ब्रह्मेन्द्राद्या हरिरविमुखा रुद्रनिवहाः
प्रसूता ध्येयोऽयं श्रतिशिखरवाक्यः पराशवः ॥

ऋतं सत्यं देवः पुरुषपरमो भूतहृदयो
नतोऽन्तानां शेषी श्रुतिवरमहारुद्रवचसा ।
रवेरन्तर्ध्येयो भवति स हि भर्गेन वचसा
द्विजै र्गायत्र्यां तु प्रतिपदमुपास्यः परशिवः ॥

यतो वाचः शम्भोर्भवति च निवृत्ताश्च मनसा
महानन्दं यस्माद्भवति जनतास्वेव निपुणं ।
जगद्यस्माज्जातं प्रभवति महेशेन जनितं
अतोऽन्ते यस्मिंस्तद्भवति च विलीनं परशिवे ॥

द्विजानां जाबालश्रुतिशिखरवाक्यैश्च विहितो
महात्रैविद्योक्तश्रुतिगदितवर्णाश्रमविधि
शिवस्यार्चा लिंगे श्रुतिगदितभस्माक्षविधृत
जपो रुद्राध्यायश्रुतिगदितपञ्चाक्षरमनोः ॥

विष्णुब्रह्मानलेन्द्रा मुनिनृपदितिजा यस्य लिंगार्चनाद्वै
संप्राप्ताः पदवीं सदैव प्रादतास्ते कर्मदेवा जनाः ।
एतत्सत्यमहो त्रिसत्यमधुना वच्मीदमभीशितु
स्सान्निध्ये निवसामि शीतलमहापद्मे व तप्तायसे ॥

---

## ஸ்ரீ தீக்ஷிதர் 22 காரணங்கள் சொல்லி சிவபரத்வம் ஸ்தாபிக்கருளிய பஞ்சரத்னம்

गायत्रीवल्लभत्वात् दशरथतनयस्थापिताराधितत्वा
च्छौरेः कैलासयात्राव्रतमुदिततयाऽभीष्टसन्तानदानात् ।
नेत्रेण स्वेन साकं दशशतकमलैर्विष्णुना पूजितत्वात्
तस्मै चक्रप्रदानादपि च पशुपतिस्सर्वदेवप्रकृष्टः ॥

कन्दर्पध्वंसकत्वात् गरळकबलनात् कालगर्वापहत्वात्
दैतेयावासभूतत्रिपुरविदळनात् दक्षयागे जयत्वात् ।
पार्थस्य स्वास्त्रदानात् नरहरिविजयात् माधवे स्त्रीशरीरे
शास्तसंपादगत्वादपि च पशुपतिस्सर्वदेवप्रकृष्टः ॥

वाराणस्यां च पाराशरनियमिभुजस्तंभनात् प्राक्पुराणाम
प्रध्वंसे केशवेनाश्रितवृषवपुषा धारितद्वारतत्वात् ।
अस्तोकैर्ब्रह्मशीर्षैर्निगळकृतालङ्कृताभूषितत्वात्
दानात्प्रज्ञानमुक्त्योरपि च पशुपतिस्सर्वदेवप्रकृष्टः

भूमौ लोकैरनेकैः सततविरचिताराधनत्वादमीषा
मष्टैश्वर्यप्रदानाद्दशविधवपुषा केशवेनाश्रितत्वात् ।
हंसक्रोडाङ्गधारिद्रुहिणमुरहरान्विष्टशीर्षाङ्घ्रिगत्वात्
जन्मध्वंसाद्यभावादपि च पशुपतिस्सर्वदेवप्रकृष्टः ॥

वैशिष्ट्ये योनिपीठायितमुररिपुश्लिष्टभावेन शंभोः
स्त्रीकार्धं प्रतिज्ञायितहरिवपुषाऽलिंगितत्वेन यद्वा
अप्राधान्यात् विशिष्टाद्वयसमधिक मे दानवानामराते:-
शंभोरुत्कृष्टभावादपि च पशुपतिस्सर्वदेवप्रकृष्टः

---

இந்த பஞ்சரத்ன ச்லோகங்களுக்கு திராவிட பாஷ்ய
கர்த்தாவான ஸ்ரீ சிவஞான ஸ்வாமிகள்
மொழிபெயர்ப்பாக வெழுதிய அகவல்

*உயர் காயத்திரிக் குரிய பொருளாதலிற்*
*றசரதன் மதலைத் தாபித் தேத்தலிற்*
*கண்ணன் கயிலையி னண்ணி நின்றிரப்பப்*
*புகழ்ச்சி யினமைந்த மகப் பேறுதவலிற்*
*றனது விழியுட னோராயி ரங்கமலப்*
*புது மலர் கொண்டரி பூசனை யாற்றலி*
*னல்கவர்க் கிரங்கி யாழி யீக் தருடலி*
*னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி*

னைப் பருங் கடுவிட மமுது செய்திடுதலிற்
றென்னிசைத் தலைவனைச் செகுத்துயிர்ப்பருகலி
னவுணர் முப்புற மழியவில் வாங்கலி
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்

தனஞ்சயன் தனக்குத் தன்படை வழங்கலின்
மானுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூ உவாகிய காரி
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி

னாழ்கடல் வரைப்பி னொன்றிரு ரனேக
ரன்பு மீதூர வருச்சனை யாற்றலி
னொன்றிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி

னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற் பிழம்பாகலிற்
பிறப் பிறப்பாதி யுயிர்க்குறு மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிபதில் வரைப்பிற்

பொய் புகல்வியாதன் கைதம் பித்தலின்
மூப்புற விறப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடையாகி ஞாலமொடு தாங்கலி
னயன் சிரமாலை யுரவில வணிதலின்

ஞானமும் வீடும் பயனினற் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்களெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந்தோரே !

## ஸ்ரீ ஹரதத்தாசார்யார் அருளிய
## தச ச்லோகங்கள்

विष्णवाद्याश्च पुरत्रयं सुरगणा जेतुं न शक्तास्स्वयं
यं शम्भुं प्रणतावयं तु पशवोऽस्माकं त्वमेवेश्वरः
तेनास्मिन् शरणागतान्पशुपते पाहीत्यवोचं द्रुतं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

यस्येषुः कमलेक्षणः पशुपतेरब्जोद्भवस्सारथि
यस्य ज्याफणिनामिनोरथपदे यस्येन्दुसूर्यावुभौ ।
मेरुर्यस्य शरासनं रथवरो भूमिस्तु यस्याभवत्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

यद्भक्तो भृगुरिन्दिरापतिमहो शापस्य लक्ष्यं भृशं
कृत्वा स्वां दयितां ... स्वमनुभिश्शैवैरयुङ्क्तासुभिः ।
यं ताराधिपचूडमागमशिरा विश्वाधिकं गायते
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

गोविन्दादधिकं नदैवतमिति प्रोच्चार्य हस्तावुभौ
उद्धृत्याथ शिवस्य सन्निधिगतो व्यासो मुनीनां पुरः ।
यस्यस्तम्भितपाणिरानतिकृता नन्दीश्वरेणाभवत्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

विष्णुस्थावरजङ्गमात्मकजगत्स्वामी विरिञ्चाधिको
यद्भक्तेन सहासुरेश्वररिपुर्युद्धं दधीचेन स ।
कृत्वा शीघ्रमहो द्विजादपजयं तस्माद्गतोभूद्भृशं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

कादीनाञ्च भयंकरः स्वमहसा क्रूरैश्च कृत्यैर्भृशं
कोपान्तो जितदानवो नरहरिर्यस्यांशभूतेन सः ।
लोकेशश्शरभेण शिक्षितमदोभूल्लीलयाऽर्धक्षणात्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

विष्वक्सेनमपीन्दिरापतिसमं तं रक्तभिक्षाच्छलात्
संहृत्याथ सभैरवश्शशिधरो यस्यांशभूतो जटी ।
ब्रह्माद्यामरशिक्षकस्य बलिनो विष्णोर्मदं चाहरत्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

येनापादितमङ्गजाङ्गभसितं दिव्याङ्गरागैस्समं
येनस्वीकृतमब्जसंभवशिरस्सौवर्णपात्रैस्समम् ।
येनाङ्गीकृतमच्युतस्यनयनं पूजारविन्दैस्समम्
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

विष्णुब्रह्मसुराधिपप्रभृतयस्सर्वेऽपि देवा भृशं
संभूताज्जलधेर्विषात्परिभवं प्राप्ता यमेत्येश्वरं ।
स्वस्वस्थानानियोजिता गतशुचः स्वस्था बभूवुर्दृढाः
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

सृष्ट्वा यस्त्रिगुणान्विधातृमधुभिच्छूलायुधेभ्यश्शिवो
दत्वैतानथ तान् ग्रहीतुमनयोश्शक्त्या पुनर्हीनयोः ।
ताभ्यां साकमहो गुणत्रयभृते रुद्राय साम्यं ददौ
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥

ஸ்ரீ ஹரதத்த சிவாசார்யார் அருளிய
ஹரிஹர தாரதம்யத்தில் 6 ச்லோகங்கள்.

## 1. அயோநிஜத்வம்

एकस्तु योनिज इति प्रसिद्धिमन्यस्त्वजात इति सर्वजगत्प्रसिद्धम् ।
कोवाऽनयोरधिक इत्यनुचिन्त्य वृद्धाः सत्यं ब्रुवन्तु तमिमं वयमाश्रयामः ॥

ஒருவன் யோனியிற் பிறக்கும் ஜென்மமெடுத்தது பிரஸித்தம். மற்றொருவனோ பிறவாதவன் என்று ஸகல சுருதிகளும் முறையிடுகின்றன. இவர்களில் யார் மேலான தெய்வமென்று பெரியோர்களும் ஞானிகளுமான நீங்கள் ஸத்யமாகச் சொன்னால், அந்த மகாபுருஷனை நாங்கள் சரணமடைகிறோம்.

(விஷ்ணுவின் 25 அவதாரங்களில் 15 அவதாரங்கள் யோனிஜம் 13ம் பக்கம் பார்க்க)

अजात इत्येवं कश्चिद्भीरुः प्रपद्यते ।

## 2. நித்யத்வம்

एकस्त्वनित्यो सुप्रथितो जगत्यामन्यस्तु नित्यः इति श्रुतिलोकसिद्धिः ।
कोवाऽनयोरधिक इत्यनुचिन्त्य वृद्धाः सत्यं ब्रुवन्तु तमिमं वयमाश्रयामः ॥

ஒருவன் அநித்யன் அடிக்கடி ஜனனமரணத்திற் குட்பட்டவன்; மற்றொருவன் நித்யன் என்று சுருதிகளால் வணங்கப்பட்டவன். இவ்விருவர்களிற் சிறந்தவனை பெரியோர்களாக நீங்கள் உண்மையாகச் சொன்னால் அந்த மகா புருஷனை நாங்கள் சரணமடைகிறோம்.

अनादि निधनं वस्तु परापर विवर्जितम् ।
आदिमध्यान्तरहितं अप्रमेयमनूपमम् ॥

மிருத்யுஞ்ஜயன் என்ற பெயர் பரமேச்வரன் ஒருவனுக்கே உரித்து.

चन्द्रवर्णं जगद्योनिं मृत्युञ्जयमुपास्महे ।

## தேவாரம்

நூறு கோடி பிரம்மர்கள் நொந்திட
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே.

## திருவாசகம்

நங்காய் ஈதென்ன தவம் நரம்போடு எலும்பணிந்து
கங்காளம் தோள்மேல் காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத் திருவர்
தங்காலஞ் செல்லத் தரித்தனன்காண் சாழலோ.

## 3. பூஜ்யத்வம்

एकस्सभक्तियुदहरन्निजमक्षिपुष्पं अन्योऽम्बुजं नयनमस्य ददौ च चक्रम् ।
कोवाऽनयोरधिक इत्यनुचिन्त्य वृद्धाः सत्यं ब्रुवन्तु तमिमं वयमाश्रयामः ॥

ஒருவன் கண்மலரால் அர்ச்சித்தான். மற்றொருவன் அவன் பூஜையை ஏற்று அவனுக்குச் சக்ராயுதமும், பத்மாக்ஷமும் அளித்தான். இவ்விருவரில் யாவர் சிறந்தவரென்று ஞானிகளும் பெரியோர்களுமாகிய நீங்கள் ஸத்யமாகச் சொன்னால், நாங்கள் அந்த மகா புருஷனைச் சரணமடைகிறோம்.

## 4. பக்தானுக்ரஹம்

भक्तं बलिं पुनरधः कृतवानिहैको भक्तं कुबेरमकरोदधिकश्रीयन्यः ।
कोवाऽनयोरधिक इत्यनुचिन्त्य वृद्धाः सत्यं ब्रुवन्तु तमिमं वयमाश्रयामः ॥

ஒருவன் பக்தனை பலிச்சக்ரவர்த்தியை (கபடம் செய்து) பாதாளத்தில் அழுத்தினான். மற்றொருவனோ பக்தனை குபேரனுக்கு மிகுதியான ஸம்பத்தையும், கைலாஸத்தில் தன் பக்கத்தில் இருக்கும் பதவியையும் கொடுத்தான். இவ்விருவரில் யார் சிறந்தவனென்று ஞானிகளும் பெரியோர்களுமான நீங்கள் உண்மையைச் சொன்னால் அந்த மகாபுருஷனை நாங்கள் சரணமடைகிறோம்.

## 5. சிவபரத்வம்

**एको नृसिंहतनुमेत्य जघान दैत्यमन्यस्तमेव हतवान् शरभावतारी ।**
**कोवाऽनयोरधिक इत्यनुचिन्त्य वृद्धाः सत्यं ब्रुवन्तु तमिमं वयमाश्रयामः ॥**

*ஒருவன் நரஸிம்ஹ ரூபமெடுத்து அஸுரனைக் கொன்றான்; மற்றொருவன் சரபாவதாரமெடுத்து அந்த நரஸிம்ஹத்தையே கொன்றான். இவ்விருவரில் யாவர் சிறந்தவரென்று பெரியோர்களாகிய நீங்கள் ஸத்தியமாகச் சொன்னால் அந்த மகாபுருஷனை நாங்கள் சரணமடைகிறோம்.*

சுருதி ருக்வேதம்:—

अहं मृणाः शरभाय ऋषि भन्दवे

சுருதி தைத்ரீயகம் :—

हरिं हरंत अनुयन्ति देवाः । विश्वस्येशानं ऋषभं मतीनाम् ।

சரபோபநிஷத் :—

यो घोरं वेषमास्थाय शरभाख्यमहेश्वरः ।
नृसिंहं लोकयन्तारं सञ्जघान महाबलः ॥
हरिं हरन्तं पादाभ्यामनुयान्ति सुरेश्वराः ।
मावधीः पुरुषा विष्णुं विक्रमस्व महानिशि ॥
कृपया भगवान्विष्णुं विददार नखैः खरैः ।
चर्माम्बरो महावीरो वीरभद्रो बभूवह ॥

## 6. சிவபக்தன் மகிமை

**ग्राहाशितं शिशुमजीवयदेकदासो गत्वाऽपरः पुरवरं स्वयमन्तकस्य ।**
**कोवाऽनयो रधिक इत्यनुचिन्त्य वृद्धाः सत्यं ब्रुवन्तु तमिमं वयमाश्रयामः ॥**

ஒருவனுடைய தாஸனை (ஸ்ரீ ஸுந்தரமூர்த்தி நாயனர்) முதலையுண்ட பிள்ளையை (சில வருஷங்கள் ஆனபின்) யமனுக்கு உத்தரவு போட்டு உயிருடன் வரவழைத்தான். மற்றவனே முதலையுண்ட பிள்ளையை எழுப்பும்பொருட்டு தானே எமலோகம் சென்று எமனைக்கேட்டு எழுப்புவித்தான். இவர்களில் யாவர் சிறந்தவரென்று பெரியோர்களும் ஞானிகளுமாகிய நீங்கள் சொல்லுகிறீர்களோ, அந்த மகாபுருஷனை நாங்க சரணமடைகிறோம்.

---

## சிவநாம மகிமை

## ஸ்ரீதர் வேங்கடேச "அய்யாவாள்"

அருளிய ஆக்யா ஷஷ்டியில் மூன்று ச்லோகங்கள்

शिवं परमकल्याणमव्याजकरुणानिधिम् ।
तदाख्यां सौख्यजननीम् वन्दे चक्रार्तिहारिणीम् ॥

(எல்லாவற்றையும்விட) உயர்ந்த மங்களமாயும், நிர்ஹேதுகமான கருணையின் இருப்பிடமுமான சிவனையும், தன்னைச் சொல்பவர்களின் இன்னல்களைப் போக்கி இன்பத்தைக் கொடுக்கவல்ல சிவநாமாவையும் வணங்குகிறேன்.

समाचक्षाणस्य स्मरभिदभिधे देवि भवती-
महो यस्यां यस्यां हरिति नयनान्तोऽवतरति ।
हरास्तस्यां तस्यामलिकनयनाश्चन्द्रमकुटाः
शरज्योत्स्नागौराः सह गिरिजयोद्यन्ति शतशः ॥

ஹே தேவி, சிவநாமாவே! உன்னைச் சொல்லுகிறவனுடைய கடைக்கண் எந்த எந்த திக்கில் விழுகிறதோ அந்த அந்த திக்கில் என்ன ஆச்சர்யம்! நெற்றிக் கண்ணரும் மதிமுடியரும், சரத்சந்திரிகைபோன்ற வெண்மேனியருமான பரமசிவன்கள் பார்வதி தேவிகளுடன் கூடியவர்களாய் நூற்றுக் கணக்காய் எழுந்திருக்கிறார்கள்.

**தாத்பர்யம் :—**

சிவநாமம் சொல்பவர்களுடைய கடாக்ஷத்திற்குப் பார்த்த மாத்ரத்தில் சிவஸாரூப்யம் அளிக்கும் சக்தி யுண்டு.

दिवं क्षोणीं क्षोणीं दिवमपि निरिन्द्रं जगदिदम्
तथान्येन्द्रं वीरद्रुहिणमपि चाऽन्यद्रुहिणकम् ।
प्रगल्भन्ते कर्तुं प्रसवशिखिरद्रोग्धुरभिधे
प्रपन्नास्त्वां शान्त्यापन्न सहजयोदासते इमे ॥

ஏ சிவநாமாவே! உன்னை கதியாக அடைந்தவர்கள் ஸ்வர்க்கத்தைப் பூமியாகவும் பூமியை ஸ்வர்க்கமாகவும் இந்த ப்ரபஞ்சத்தை இந்திரன் அற்றதாகவும் அப்படியே வேறொரு இந்திரனைக் கொண்டதாகவும், பிரம்மனை யகற்றவும் வேறு பிரம்மனை ச்ருஷ்டிக்கவும் சக்தர்களாக விருந்தும் இந்த அதிசயங்களைக் கையாள்வதில்லை. சிவராஜ யோகத்தில் அமர்ந்து சிவானந்த வெள்ளத்தில் திளைத்திருக்கிறபடியால் அமைதியே பெரிதாகவும், அன்பே சிவமாகவும் அமர்ந்திருப்பார்கள்.

परित्यज्याशेषं जननि भवतीमेव भजतां
त्वमेवाशानाम्ये यदभिलषितं दैवतवरम् ।
तदाकृत्या दृष्टिं श्रुतिमपि तदुक्त्या सफलतां
नयन्ती धत्से नन्ववधिविधुरां निर्वृतिधुराम् ॥

மற்ற எந்த ஸங்கங்களையும், வழிபாடுகளையும் தெய்வங்களையும் நாடாது சிவநாமா வொன்றையே கைப்பிடித்து வரும் ஏக பக்தருக்கு மற்றெல்லா தேவதைகளும் பிரத்யக்ஷமே. எந்த தெய்வத்தால் எந்தக் கார்யமாக வேண்டுமானாலும் சிவநாமாவின் மகிமையால் அந்தத் தெய்வம் பிரத்யக்ஷமாகி, காரியத்தை நடத்தி வைக்கும். அப்படிப் பல தெய்வங்கள் ரூபமாய்த் தோன்றி பல விதமாய்ப் பேசுவதும் இந்தச் சிவதத்வம் ஒன்றே.

## ஸ்ரீமதப்பைய்ய தீக்ஷிதர் அவர்கள் செய்த சிவஸ்தோத்ரங்களில் இரண்டு

श्रीकान्तद्रुहिणोऽपमन्युतपनस्कन्देन्द्रनन्द्यादयः
प्राचीनागुरवोऽपि यस्य करुणालेशाल्लब्धा गौरवम् ।
तं सर्वादिगुरुं मनोज्ञवपुषं मन्दस्मितालङ्कृतं
चिन्मुद्राकृतिमुद्रपाणिनलिनं चित्ते शिवं कुर्महे ॥

तव श्रीपादाब्जे कथमपि च भक्तिर्न सुलभा
निहन्त्री दुःखानां निखिलपुरुषार्थैक वसतिः ।
विना पुण्यैः जन्मान्तरशतसहस्रेषु विहितैः
नरश्रेयोमात्रं खलु बहुळविघ्नैर्न लभते ॥

---

## श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पादपूज्यकृत शिवपञ्चाक्षरीस्तोत्रम्

ओम् । ओङ्कार बिन्दुसंयुक्तं नित्यं ध्यायन्ति योगिनः ।
कामदं मोक्षदं तस्मादोङ्काराय नमो नमः ॥

ओं नं । नमन्ति मुनयस्सर्वे नमन्त्यप्सरसाङ्गनाः ।
नराणामादिदेवानां नकाराय नमो नमः ॥

ओं मं । महत्तत्वं महादेवप्रियं ज्ञानप्रदं परम् ।
महापापहरं तस्मान्मकाराय नमो नमः ॥

ओं शिं । शैवं शान्तं शिवाकारं शिवानुग्रहकाराय नमो नमः

ओं वां ।  वाहनं वृषभं यस्य वासुकिः कण्ठभूषणम् ।
वाग्शक्तिधरं देवं वाकाराय नमो नमः ॥

ओं यं ।  यकारे संस्थितो देवो यकारं परमं शुभम् ।
यन्नित्यं परमानन्दं यकाराय नमो नमः ॥

यः क्षीराम्बुधिमन्थनोद्भवमहाहालाहलं भीकरं
दृष्ट्वा तत्र पलायितान् सुरगणान् नारायणादींस्तदा ।
यः पीत्वा परिपालयज्जगदिदं विश्वाधिकं शङ्करं
सेवध्वं सकलापदः परिहरन् कैलासवासी विभुः ॥

षडक्षरमिदं स्तोत्रं यः पठेच्छिवसन्निधौ ।
तस्यमृत्युभयं नास्ति ह्यपमृत्युभयं कुतः ॥

यत्कृत्यं तन्नकृत्यं यदकृत्यं कृत्यवत्तदाचरितं ।
उभयोः प्रायश्चित्तं शिवतवनामाक्षरद्वयोच्चरितम् ॥

शिव शिवेति शिवेति शिवेति वा भव भवेति भवेति भवेति वा
हर हरेति हरेति हरेति वा भज मनश्शिवमेव निरन्तरम् ॥

## பஞ்சாக்ஷர மகிமை

आदौ प्रासादमन्त्रं तदनुमृतिहरं पञ्चभिर्व्याहृतेश्च
प्रोद्यत्त्रियंबकं यमप्रतिमृतिहरं भूयएवैतदाद्यम् ।
कृत्वा न्यासं षडङ्गं स्रवदमृतरुचैः मण्डलं चण्डरश्मौ
ध्यात्वा योगीश रुद्रं सजयतिमरणं शुक्रविद्याप्रसादात् ॥

पातञ्जलसूत्रम्

विद्यासु श्रुतिरुत्कृष्टा तत्रैकादशिनी श्रुतौ ।
तत्र पञ्चाक्षरी तस्यां शिव इत्यक्षरद्वयम् ॥

தேவாரம் : (ஞானஸம்பந்தர்)

*காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே*

*மந்த ரம்அன்ன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே"*

தேவாரம் : (அப்பர்)

*நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே*

*பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே*

திருமந்திரம் : (திருமூலர்)

*சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே*

## விபூதியின் மகிமை.

भक्षणात्सर्वपापानां भस्मेति परिकीर्तिता ।

தேவாரம் : (ஞானசம்பந்தர்)

*மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு*
*தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு*
*செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே*

*முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு*
*சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு*
*பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு*
*சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே*

*அருத்த மாவது நீறு அவல மறுப்பது நீறு*
*வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு*
*பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு*
*திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே*

திருமந்திரம் : (திருமூலர்)

*கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி*
*சிங்காரமான சிவனடி சேர்வரே*

திருவாசகம் : (மாணிக்கவாசகர்)

*பிணியெலாம் வரினுமஞ்சேன் பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்*
*துணிநிலா வணியினான்றன் தொழும்பரோ டழுந்தி யம்மால்*
*திணி நிலம் பிளந்துங்காணாச் சேவடிபரவி வெண்ணீ*
*றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே*

---

## ஸ்ரீருத்ராக்ஷ மகிமை

*உண்டு மணிகள் பலவு மவற்றுள்ளும்*
*கண்டி விசிட்டமெனக் காண்* (சைவசமயநெறி)

## கடம்பவன புராணம்

*திரிபுர ரெனும்பே ரவுணராற் சிதை*
*சிந்திய மான்முதற் றேவர்*
*புரிதரு தவமோ ராயிரம் வருட*
*புரிந்திட வியந்து போய்ப்புரி*

*யரிதிதென் றிரங்கிக் கண்ணிமை யாது*
*பார்ப்பழுக் கண்ணினு ளமைந்த*
*விரிதுளி தாழ்ந்து கண்டிகை மரமா*
*வெழுந்தது விழுந்த தொண் புவியில்*

## உபதேச காண்டம்

*மெய்யருப்பிய வேர்வையின் விரிபுனலாட்டின்*
*மையரும்பிய மழையினின் மககண்மெய்ந் நெடுக்குற்*
*றெய்வ வெண்டிரு நீற்றணி சிவதருஞ் சிதைந்தால்*
*வெய்ய பூதம்வெவ் வழுதரா வரக்கரான் மெலிவார்.*

*ஆலங்குமாமணி யுருத்திர வக்கமொன் றணியின்*
*விலங்கெயிற் று வெம்பூதமே முதலிய மேவா*
*புலங்கொண் மாமணி புனைதரிற் போக்கினு நிதனை*
*விலங்கு மாமணி நீற்றொடும் புனைவதற் கிசையும்*

---

## *பிறவியின் பயன்*

**தேவாரம்:** *(அப்பர்)*

*திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்*
*தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்*
*ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்*
*உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்*

*அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்*
*அளியற்றார் பிறந்தவா றேதோவென்னிற்*
*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்*
*பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே.*

**திருவாசகம் :** (மாணிக்கவாசகர்)

*புற்றில் வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்*
*கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி*
*மற்றும் ஓர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மான்*
*பற்றிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே.*

## சிவதரிசனம்

*பொன்னொத்த மேனிமேற் பொடியுங் கண்டேன்*
*புலித்தோலுடை கண்டேன் புணர்த்தன்மேல்*
*மின்னொத்த நுண்ணிடையாள் பாகங்கண்டேன்*
*மிளிர்வதொரு பாம்பும் அரைமேற் கண்டேன்*
*அன்னத் தேருர்த்த அரக்கன் தன்னை*
*அலற அடர்த்திட்ட அடியுங்கண்டேன்*
*சின்ன மலர்க்கொன்றை கண்ணிகண்டேன்*
*சிவனை நான் சிந்தையுட் கண்டவாறே* (அப்பர்)

## சிவகதி

*சிவகதி யேகதி மற்றுள்ள எல்லாம்*
*பவகதி பாசப் பிறவியொன் றண்டு*
*தவகதி தன்னொடு நேரொன்று தோன்றில்*
*அவகதி மூவரும் அவ்வகை யாமே* (திருமூலர்)

## சிவபக்தி மகிமை

ओङ्काररथमारुह्य विष्णुं कृत्वा तु सारथिं ।
ब्रह्मलोकपदान्वेषी रुद्राराधनतत्परः ॥

## வாழ்த்து.

*வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்கவே.*

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY

உ

## ஸ்ரீ ஹரதத்தர் பக்த ஜன ஸபை, சென்னை

# வேண்டுகோள்

பிரதி வருஷமும் தைமீ சுக்ல பஞ்சமி தினம் ஸ்ரீ ஹரதத்தர் மோக்ஷமடைந்த தினம். அன்றைய தினத்தை சிவபக்தர்கள் எல்லோரும் ஓர் புண்ய தினமாகவும் பண்டிகை தினமாகவும் கொண்டாடவும்.

காலையில் ஸ்நானம் செய்து, விபூதி ருத்ராக்ஷமணிந்து சிவன் கோயிலுக்குப்போய் அபிஷேகம், அர்ச்சனாதிகள் செய்து, பஞ்சமூர்த்திகளையும் ஸேவித்து, வீட்டிலும் சிவ பூஜை செய்து, மகாநைவேத்யம், அறுசுவை பக்ஷ்ய பதார்த்தங்கள் நிவேதனம் செய்து, ஸ்ரீ ஹரதத்தர் அருளிய சிவபரத்வ ச்லோகங்களைப் பாராயணம் செய்து, பஞ்சாக்ஷர ஜபம் 108 அல்லது 1008 செய்து, பிரத்யேகமாக ஸ்ரீ விக்னேச்வரருக்கும் பூஜைசெய்து, 108 மோதகங்கள் நிவேதனம் செய்து கொண்டாடவும்.

மாலையிலும், இரவிலும் ஆங்காங்கு பார்வதி பரமசிவன் ஸுப்ரமண்யர், விநாயகர், ராஜராஜேச்வரி, ஹரதத்தர் முதலிய படங்களை அலங்கரித்து நமஸ்கரித்து, சிவபஜனை, தேவாரபஜனை, சிவபரத்வ உபந்யாஸங்கள், ஹரதத்தர் சரித்திரம் முதலியன நடத்த ஏற்பாடு செய்யலாம்.

தைமீ சுக்ல பஞ்சமியோடு முடியும் 11 தினங்கள் (ஏகாதசாஹம்) தொடர்பாக "ஹரதத்தர் ஜயந்தி" யென்று கொண்டாடலாம்.

முடிந்தவர்கள் கஞ்சனூர் க்ஷேத்திரத்தில் அன்றைய தினம் உற்சவம் கண்டு ஸேவிக்கலாம்.

இந்த வருஷம் அதிக விமரிசையாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் முற்றுப்பெறாது போனாலும் முடிந்த வரையில் கொண்டாடவும். அடுத்த வருஷம் முதல் பலபல இடங்களி லிருந்தும், ஸ்ரீ ஹரதத்தர் தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் செய்திகள் கிடைக்குமென்று எதிர் பார்க்கிறோம். அன்பே சிவம்.

ஸ்ரீ ஹரதத்தர் பக்த ஜன ஸபை, சென்னை
7, குருகேச முதலியார் ரோடு, தியாகராயநகர், சென்னை 17

## எமது சொந்த ப்ரசுரங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸௌந்தர்யலஹரீ | [illegible] | 0 | 0 |
| ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய [illegible] | [illegible] | 0 | 0 |
| மஹிஷமர்தினி [illegible] | 2 | 0 | 0 |
| கனகதாரா ஸ்தோத்ரம் | 0 | 12 | 0 |
| த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம் | 0 | 10 | 0 |
| சாரதா புஜங்கப்ரயாதாஷ்டகம் | 0 | 8 | 0 |
| கௌரீ தசகம் | 0 | 8 | 0 |
| தக்ஷிணாமூர்த்தி அஷ்டோத்தரம் | 0 | 6 | 0 |
| ஸ்ரீ மீனாக்ஷி பஞ்சரத்ந ஸ்தோத்ரம் | 0 | 5 | 0 |
| லலிதா பஞ்சரத்னம் | 0 | 5 | 0 |
| ஸப்த ஸ்துதி: | 0 | 5 | 0 |
| ஆனந்தலஹரீ | 0 | 4 | 0 |
| ஸ்ரீ சங்கர விஜயம் | 0 | 4 | 0 |
| ஸ்ரீ கணேச பஞ்சரத்னம் | 0 | 4 | 0 |
| ஸ்ரீ மஹா த்ரிபுரஸுந்தரி படம் | 1 | 9 | 0 |

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY, TIRUVANMIYUR :: MADRAS-41

கிரி ப்ரஸ், பப்ளிஷர்ஸ், சென்னை 5

*Printed & Published by :*
GIRI PRESS, TRIPLICANE.—1000 Copies.